விலை : 20.00
பக்கங்கள் : இருபது


# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ரா ம் கோ
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 19 வெள்ளிக்கிழமை (01.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 044

# இலங்கையின் ஜனநாயக மேம்பாட்டை ஆராயவே நேரில் வந்துள்ளோம்



## பிரித்தானிய அமைச்சர் அலஸ்ரயர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஜனநாயக மேம்பாட்டை ஆராய்வதற்காகவே நாம் விஜயம் செய்துள்ளோம் என கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டிற்கு முன்னதாக இலங்கை வந்துள்ள பிரித்தானியக் குழுவின் தென்னாசியாவுக்கான வெளிவிவகார அமைச்சர் அலஸ்ரயர் பேர்ட் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்துள்ள பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் அலஸ்ரயர் பேர்ட் நேற்று முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசத்திற்கு விஜயம்செய்திருந்தார். இதன்போது, இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பிரிட்டிஷ் மகாராணியார் கலந்து கொள்வாரா? இல்லையா? என்பது தொடர்பாக பிரித்தானியாவின் தென்னாசியாவிற்கான வெளிவிவகார அமைச்சர் அலஸ்ரயர் பேர்ட்டிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அலஸ்ரயர் பேர்ட், இலங்கையில் இடம்பெறவுள்ள பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் பிரிட்டிஷ் மகாராணியார்கலந்துகொள்வாரா? இல்லையா? என்பது குறித்து இதுவரை எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

பொதுநலவாய மாநாட்டில் மகாராணியார் கலந்து கொள்ளாதது எந்த வகையிலும் பொதுநலவாய உச்சி மாநாட்டிற்கு பாதகத்தை ஏற்படுத்தப்போவதில்லை என நான் நினைக்கின்றேன்.

பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் (19ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் ஜனநாயகத்தை அரசு நிலைநாட்டவில்லை! —ஜே.வி.பி.

(வவுனியா)

...ம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு மூன்று ... பூர்த்தியாகியுள்ளன. இருப்பினும் ...ல் ஜனநாயகத்தை நிலைநாட்ட இந்த ...ங்கம் தவறியுள்ளது. அத்துடன் வடக்... மக்களின் உரிமைகளைப் பெற்றுக்...க்க இந்த அரசாங்கம் இதுவரையில் ...வாரு நடவடிக்கையையும் முன்னெடுக்...லை என்று மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

வடக்குக்கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துமாறு கோரி சகோதரத்துவத்திற்கான மக்கள் அரண் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு (19ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவுக்குள் நுழைய மகிந்தவுக்குத் தடை!

## விதிக்கக் கோருகிறார் ராமதாஸ்

(சென்னை)

போர்க்குற்றவாளியான இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இப்போது திருப்பதி வருவதற்கு மட்டுமன்றி, இனி எக்காலத்திலும் இந்தியாவின் எந்தப் பகுதிக்குள்ளும் நுழைய அனுமதியளிக்கக்கூடாது நிரந்தரமாக தடை விதிக்க வேண்டும் என்று பா.ம.க.தலைவர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கைப் போரில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்காக இலங்கை மீது பன்னாட்டு போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்ற முழக்கம் தமிழகத்தில் தீவிரமடைந்துள்ள நிலையில், இலங்கை (02ஆம் பக்கம் பார்க்க)

## ...ரைவில் திரைவரும் ...மலின் விஸ்வரூபம்

(கொழும்பு)

...டிகர் கமல்ஹாசன் நடித்த விஸ்வரூபம் ...ரப்படத்தை இலங்கையில் திரையிடு...ற்குத் தடைவிதிக்கவில்லை. தற்காலி...



...க அந்தத் திரைப்படம் இடைநிறுத்தப்பட்...ளது. இந்தத் திரைப்படம் தொடர்பில் இன்... இரண்டொரு (19ஆம் பக்கம் பார்க்க)

# அவுஸ்.பிரதி எதிர்க் கட்சித் தலைவர் ஜனாதிபதியுடன் நேற்றுச் சந்திப்பு

(கொழும்பு)

கொழும்பு வந்துள்ள அவுஸ்திரேலிய பாராளுமன்ற பிரதி எதிர்க் கட்சித் தலைவர் ஜூலி பிஷோப் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளார். நேற்று நண்பகல் அலரிமாளிகையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிடுகையில்,

வடக்கிலும், கிழக்கிலும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் திருப்தியளிப்பதாகவும், போருக்குப் பின்னான இலங்கையின் செயற்பாடு துரிதவளர்ச்சி கண்டுள்ளதாகவும் ஜனாதிபதியிடம் அவுஸ்திரேலிய பிரதி எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கான சட்டவிரோத குடிவரவு, குடியகல்வு பிரச்சினை தொடர்பாகவும், மற்றும் பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்துவது குறித்த பல விடயங்கள் தொடர்பாகவும் அவுஸ்திரேலியக் குழுவினர் ஜனாதிபதி மகிந்தவிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (செ-11)



# ...காதார தொழிலாளர்கள் 50 பேரை ...மலதிகமாக இணைக்கத் தீர்மானம்

## ...பாழ்.மாநகரசபையில் நேற்று நிறைவேற்றப்பட்டது


(யாழ்ப்பாணம்)

...சுகாதாரத் தொழிலாளர்கள் 50 பேரை ...திகமாக இணைப்பது தொடர்பில் யாழ். ...கர சபையின் இந்த வருடத்திற்கான முதலா...மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் காரசார ...வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற ... ஆளும்- எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கத்...றி சபையை சந்தை போன்று சல... வைத்தனர்.

உறுப்பினர்கள் இவ்வாறு கத்திக்குளறி சபையை சலசலக்க வைத்தபோது உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் முகத்தை சுழித்தபடி அமர்ந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இருப்பினும் எதிர்க்கட்சியின் கடும் எதிர்ப்பினை மீறியும் மாநகரசபையின் பெரும்பான்மை பலத்தை பயன்படுத்தி ஆளும்கட்சி 14 வாக்கு (02ஆம் பக்கம் பார்க்க)

# இளைஞர் நல்லிணக்க நிலையம் முள்ளியவளையில் நேற்று திறப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று முள்ளியவளை 4-ம் வட்டாரத்தில் நேற்றையதினம் இளைஞர் நல்லிணக்க நிலையம் ஒன்று 12.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கைக்கு விஜயத்தினை மேற்கொண்டுள்ள பொதுநலவாய அமைப்பின் தென்னாசிய வெளிவிவகார அமைச்சர் அலக்ஸ்ரின் பேட்டினால் மேற்படி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இவருடன் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் (02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...டுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்தியாவுக்குள்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெப்ரவரி மாதம் 8-ம் திகதி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையிலிருந்து பீகார் சென்று புத்த காயாவில் வழிபாடு நடத்தவிருக்கும் ராஜபக்ஷ அங்கிருந்து, திருப்பதி சென்று சிறப்பு வழிபாடு நடத்தப்படவிருப்பதாகவும், அவருக்கு அங்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பல்லாயிரக்கணக்கான தமிழர்களைக் கொடூரமான முறையில் படுகொலை செய்ததுடன், இலங்கையில் தமிழ் இனத்தையே அழித்தொழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மகிந்த கைது செய்து சிறையில் அடைக்கப்பட வேண்டியவர்.

இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றச் சாட்டுக்கள் காரணமாக இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் மகிந்த நுழைய முடியாத நிலை நிலவுகிறது.

இத்தகைய சூழலில், அவரை மத்திய அரசு ஆண்டுக்கு மூன்று முறை இந்தியாவுக்கு அழைத்து, சிவப்பு கம்பள வரவேற்பு அளிப்பது தமிழர்களின் உணர்வுகளை காயப்படுத்தும் செயலாகும்.

கடந்தாண்டு செப்ரெம்பர் மாதத்தில் மகிந்த மத்திய பிரதேசத்தில் உள்ள சாஞ்சிக்கு வருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதை எதிர்த்து தமிழகத்தில் கடுமையான கொந்தளிப்பு எழுந்த போது, மகிந்தவை இந்தியாவிற்கு அழைத்தது பாரதீய ஜனதாதான் என்று கூறி பொறுப்பை தட்டிக்கழித்தது.

அதன் பிறகாவது தமிழர்களின் உணர்வுகளை மதித்து மகிந்தவின் வருகைக்கு மத்திய அரசு அனுமதியளிக்காது என்று தமிழ் உணர் வாளர்கள் கருதினர்.

ஆனால் தமிழர்களின் உணர்வுகளை சற்றும் மதிக்காமல் மகிந்தவின் வருகைக்கு மத்திய அரசு அனுமதி அளித்திருப்பது கடுமையாக கண்டிக்கத்தக்கது.

போர்க் குற்றவாளியான இலங்கை ஜனாதிபதியை இந்தியாவின் எந்தப் பகுதிக்குள்ளும் நுழைய அனுமதியளிக்கக்கூடாது. குஜராத் மாநிலத்தில் நடந்த மதக் கலவரத்தை காரணம் காட்டி, அம்மாநில முதலமைச்சர் மோடி அமெரிக்காவுக்குள் நுழைய கடந்த 11 ஆண்டுகளாக தடை விதிக்கப்பட்டிருப்பதைப் போல, மகிந்தவையும் இப்போது திருப்பதி வருவதற்கு மட்டுமன்றி, இனி எக்காலத்திலும் இந்தியாவிற்குள் நுழைய நிரந்தரமாகத் தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். இவ்வாறு அவரது அறிக்கையில் கூறப் பட்டுள்ளது. (செ-11)

# இளைஞர்...

ஜோன் ராங்கினும் மேற்படி பிரதேசத்துக்கு விஜயத்தினை மேற்கொண்டார்.

அங்கு இளைஞர் நல்லிணக்க நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றிய அமைச்சர் பேட், அனைவரும் உண்மையாகவும் நேர்மையாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டும்.

அனைவருக்கும் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், முயற்சியாண்மை என அனைத்தும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமானதாகும்.

ஒருவருக்கு சொந்தமான - உரிமையான இடத்தில் அவர் வாழ்வதற்கு உரிமை உண்டு. அதனை தடை செய்வதற்கு யாருக்குமே உரிமை கிடையாது எனவும் பேட் தெரிவித்தார்.

அதன்பின்னர் முல்லைத்தீவு மக்களைச் சந்தித்த அமைச்சர் அவர்களது குறைநிறைகளையும் அறிந்துசென்றார். (செ-11,267)


## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


## மாவை இந்து பொதுச்சேவை கழகம்
## மாவிட்டபுரம்

## விவேகானந்தர் எழுச்சி மாநாடு

காலம்: 01.02.2013 (வெள்ளி) பி.ப 1.00 மணி

இடம்: யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

நிகழ்ச்சி நிரல்

1. மங்கல விளக்கேற்றல்
2. தேவாரம்
3. வரவேற்புரை
4. தலைமையுரை
5. சொற்பொழிவு

மதியம்12.15 மணியளவில் ஊர்தி, துர்க்கை அம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்
மாவை இந்து பொதுச்சேவை கழகம்

(1631)

விளம்பர அனுசரணை:
கிருபா லேணர்ஸ் சுன்னாகம் T.P.: 021 224 2022

## மனதார வாழ்த்துகின்றோம்



### செல்வன் சா.பிரசாந்

திரு.திருமதி சாந்தகுமார்-பாமினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சா.பிரசாந் அவர்களை 11 ஆவது பிறந்த தினத்தில் வாழ்த்துவதுடன்
கடந்த 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் (2012)
பரீட்சையில் 175 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்தமையையிட்டும் வாழ்த்துவதுடன்
அவர் பல கலைகளையும் கற்று சிறப்புப்பெற்று வாழ
வாழ்த்துகின்றோம்.

தம்பளை
சங்குவேலி, மானிப்பாய்.

நோர்வே பெரியப்பா
திரு.திருமதி கிருபானந்தன்.

(1629)


## நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவுகள்

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக்கூடியவாறு துரித சேவை....



| கட்டணங்கள் | (1Kg) இற்கு |
|---|---|
| லண்டன் | 1400/= |
| கனடா | 2500/= |

Special Rate:
ஜேர்மன் 5Kg இற்கு 5500/=
அவுஸ்திரேலியா 5Kg இற்கு 5500/=
சுவிஸ் 5Kg இற்கு 7800/=

சாதாரண சேவை 1 kg க்கு : கனடா 700/=, லண்டன் 600/=, சுவிஸ் 600/=
(பொதிகள் நிறை 5 Kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

குறிப்பு: ஆவணங்கள், கடிதங்கள் அனுப்புவதற்கு விசேட கட்டணம்
லண்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு
500 கிராமுக்கு 2000 ரூபா மட்டுமே...!
3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி உங்கள் பிரதேசங்களில் உள்ள பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் பொதிகளை ஒப்படைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

நெல்லியடி மருதம் கொமினிகேசன் 021 226 3210
வல்வெட்டித்துறை: V2 Travels and Tours 021 2055044 (சி-2307)

மேலதிக தொடர்புகளுக்கு:
Rain Bow Travels
இல.30/2. 3 ஆம் ஒழுங்கை.
மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம். 021 221 9598
0778710732


## கண்ணீரில் கரைந்த பாசதீபம்
## 4ஆம் ஆண்டு நினைவலைகள்:...

தோற்றம்
18
07
1937



மறைவு
01
02
2009

### அமரர் கந்தையா நாகராசா

திதி: 15.02.2013

நான்காண்டு ஆனதுவோ அப்பா-நாம்
ஆறவில்லை எம் மனம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவலைகள்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

4-ம் வட்டாரம்
கோம்பாவில், புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(1630)

## மனதார வாழ்த்துகின்றோம்

கிளிநொச்சி மத்திய கல்லூரியில்
க.பொ.த உயர்தரம்-2012 தேர்வில்
கணிதம், விஞ்ஞானம்,
கலை,வர்த்தகம் ஆகிய அனைத்து
பிரிவுகளிலும் மாவட்டத்தின்
முன்னிலை பெறுபேறுகளைப்
பெற்று எமது கல்லூரிக்கு பெருமை
சேர்த்த மாணவர்களையும்
அவர்களைக் கற்பித்த
ஆசிரியர்களையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி.

(சி-2306)


## ACCA Association of Chartered Certified Accountants

க.பொ.த(உ/த)பரீட்சைப் பெறுபேறுகள் அடிப்படையில்
இளம் சாதனையாளர் தேர்வு - SMS போட்டி

கேள்வி

க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறு-2012 அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் எந்தத்துறை தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களினுள் இடம்பெறவுள்ளது? (ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளாயின் , வினை பிரயோகிக்கலாம்)

தொலைபேசி இல:- 0215670345/0779009426

SMS முடிவுத் திகதி: 05.02.2013

குறிப்பு: போட்டியில் 30 வயதிற்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம். தெரிவு செய்யப்படும் 25 அதிர்ஷ்டசாலிகளுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் இளம் சாதனையாளர் தேர்வு விருது வழங்கும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு துறையிலும் யாழ்.மாவட்டத்தில் முதல் 50 இடங்கள் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள், விருதுகள் வழங்கவுள்ளதனால் தங்களது பதிவுகளை நாளை காலை 9.00 மணியிலிருந்து மேற்கொள்ள முடியும்.

அனுசரணை
ACCA
பட்டயக் கணக்காளர்
கற்கை வழிகாட்டல் அலகு,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P.: 0215670345

(சி-2310)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## விதியின் பயன்

நாம் "ஒரு செயல் நடக்க வேண்டும்" என்று ஆசைப்படுகிறோம்– ஆனால், அது நடைபெறுவதில்லை.

நாம் "எது நடக்கக்கூடாது"என்று ஆசைப்படுகிறோமோ – அது நடந்து விடும்.

இதற்கு எதைக் காரணமாகச் சொல்வது?

இதற்குத் தான் சில பேர் "விதி" என்று பேர் வைத்துள்ளார்கள். எமது விருப்பத்திற்கு மாறாக எதுவும் நடந்து விட்டால் அது "விதி" என்ற பெயரில் சுலபமாக சொல்லப்படுகிறது.

ஒரு சமயம் தேவலோகத்திலே நாராயணனும் லட்சுமி தேவியும் மிகவும் உல்லாசமாக அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

பூலோகத்திலே நடப்பவை அனைத்தும் அவர்களுக்குத் தெரியும். அந்தச் சமயம் பார்த்து இங்கே ஒரு பிச்சைக்காரன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். உணவு கிடைத்ததும் அதை எடுத்துக் கொண்டு ஒரு தனி இடத்திற்குப் போனான். அங்கே அமர்ந்திருந்து உண்பதற்கு முன்னர், கடவுளை நினைத்தான். "நாராயணா... நாராயணா" என்று நிவேதனம் செய்து விட்டு உணவை உண்ண ஆரம்பித்தான்.

தேவலோகத்திலே இருந்த லட்சுமி தேவி இதைப் பார்த்து விட்டு நாராயணனிடம்... சொன்னாள்...

"அதோ பார்த்தீர்களா? உங்களுடைய பக்தன் அவன் தினமும் பிச்சையெடுத்து உணவு உண்பதற்கு முன்னர் முதலிலே உங்களுக்கு அர்ப்பணித்து விட்டுத்தான் சாப்பிடுகிறான். அப்படியான உங்கள் பக்தனை பிச்சையெடுக்க விட்டுள்ளீர்கள். இது நியாயமா? அவனுக்கு சற்று செல்வத்தை வழங்கி வசதியாக வாழ வைக்கக் கூடாதா?" என்று கேட்டார். இதைக் கேட்ட நாராயணன் சிரித்தார்.

அதன்பின் கூறினார்... இவன் முற்பிறவியிலே செல்வந்தனாகத்தான் இருந்தான். அப்போது யாருக்குமே இட்டு ஈயவில்லை. அதனால்தான் இப்பிறவியிலே கஷ்டத்தை அனுபவிக்கிறான். அது அவனுடைய விதியின் பயன்" என்றார் கடவுள்.

"என்ன கூறுகிறீர்கள்? விதியா... நாம் நினைத்தால் எது முடியாது? இப்போது நான் அவனுக்கு உதவி செய்யப் போகிறேன்" என்றார்.

"என்ன உதவி?" என்று கேட்டார்.

"அவனுக்கு சிறிது செல்வம் கொடுத்து கஷ்டத்திலேயிருந்து காப்பாற்ற போகிறேன்" என்றார்.

"சரி செய்து பார்" என்று கடவுள் கூறினார்.

உடனே லட்சுமி தேவி... ஒரு பண முடிச்சை பூலோகத்திலே அந்தப் பிச்சைக்காரன் தினமும் நடந்து வரும் பாதை வழியே போட்டார்.

ஆனால், அந்தப் பிச்சைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? அன்றைய தினம் பார்வையில்லாதவர்கள் எப்படி தெருவில் நடப்பார்கள் என்று தெரிந்து கொள்வதற்காக தனது இருகண்களையும் இறுக மூடியவாறு தட்டுத்தடுமாறி நடந்தான். இதிலே வழியிலே கிடந்த பண முடிச்சு அவனுக்குத் தெரியவில்லை. பண முடிச்சையும் தாண்டிப் போய்விட்டான்.

சற்று நேரம் கடந்த நிலையில் கண்களைத் திறந்தான். "ஆஹா! கண்ணில்லாதவன் மாதிரியே நடந்து விட்டோமே என்ற பெருமையில் அவன் அப்படியே சென்று விட்டான்.

இவன்போன பாதையால் ஒருவன் சாதாரணமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவ்வேளையில் அவனுக்கு கண்ணிலே அந்தப் பண முடிச்சு தென்பட்டது. அதை எடுத்துக் கொண்டு சந்தோஷமாக நடக்க ஆரம்பித்தான். தேவலோகத்தில் இருந்து நாராயணனும் லட்சுமிதேவியும் இதைப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

"இப்போது என்ன நடந்ததென்று பார்த்தாயா... அந்த பக்தனை பணக்காரனாக மாற்ற வேண்டுமென்று துடி துடித்தாயே... முடிந்ததா உன்னாலே?" என்று கேட்டார்.

லட்சுமிதேவி அதன்பின்னர் தான் ஒத்துக் கொண்டார். உண்மை தான் பிரபு; விதிப்படிதான் எதுவுமே நடக்கிறது என்பதை இப்போது நான் ஒத்துக் கொள்கிறேன்" என்றாள்.

இந்தக் கதையை அறிவு பூர்வமாக சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

"ஒரு பக்தனை பணக்காரனாக மாற்ற வேண்டுமென கடவுள் நினைத்தால்கூட அது முடியாது என்ற ஒரு உண்மை இக்கதையினுள் இருக்கிறது. அந்த விதி யார் கையிலே இருக்கிறது... மனிதன் கையிலேதான்.

மனிதன் சிறந்த விதமாக நடந்து கொண்டால், விதியும் அவனுக்கு சாதகமாக அமையும்.

விழித்துக் கொண்டிருக்க வேண்டிய நேரத்திலே கண் மூடியிருக்கிறது போல ஆகிவிடும். இந்தப் பிச்சைக்காரனுக்கு நடந்த மாதிரி...

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# உணவு கையாளும் நிலையங்களுக்கான பொ.சு.பரிசோதகர்களின் அறிவுறுத்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் அமைந்துள்ள உணவு கையாளும் நிலையங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினர் திடீர் பரிசோதனைகளையும் அதிரடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனரென யாழ்.மாநகராட்சி மன்ற பிரதம பொதுச்சுகாதார பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் முதல்வர், ஆணையாளர் சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் பணிப்பின் பிரகாரமும் 26 ஆம் இலக்க 1980 ஆம் ஆண்டு உணவுச் சட்டத்திற்கும் அதன் திருத்தங்களுக் கும் உணவு ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவும் யாழ்.மாநகராட்சி மன்ற எல்லைக்குள் அமைந்துள்ள ஒன்பது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு களில் அமைந்துள்ள அண்ணளவாக 250 நிலையங்களில் 117 நிலையங் களில் குறைபாடுகள் இனங்காணப்பட்டு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் ஏனைய நிலையங்களுக்கும் இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வண்ணம் அறிவித்தல்கள் வழங்கப்பட்டு நடவடிக்கை கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து எடுக்கப்பட்டு வருகின்றது. முதலில் கூடியளவு தரம் குறைவான நிலையங்கள் என மதிப்பீடு செய்யப்பட்டவற்றிற்கு முன்னுரிமை அடிப்படையில் அறிவித்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அறிவித்தல் வழங்கப்பட்டு இதுவரை குறைபாடுகளை நிவர்த்தி செய்யாதவர்களுக்கு பதின்நான்கு நாட்கள் கால இடைவெளியில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மொத்தம் பதினொரு வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்படியும் மொத்தமாக இப்பதினொரு வழக்குகளுக்கும் ஐம்பத்தாறாயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாதுவிடின் மேற்படி நிலையங்களைப் பூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்த ஒரு நிலையத்தை கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் மூடும்படி நீதிமன்றம் உத்தரவிட்டதுடன் திருத்தங்களை செய்த பின் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததன் பின்னரே மீண்டும் திறக்க அனுமதிக்கப்படும் எனவும் நீதிமன்றம் கட்ட ளையிட்டது.

மேற்படி விடயம் சார்பாக யாழ்.மாநகராட்சி மன்ற பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர்தெரிவிக்கையில்,

ஏற்கனவே பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவித்தலின் பிரகாரம் ஒன்பது உணவு கையாளும் நிலையங்கள் தாமாகவே தமது நிலையங்களை பூட்டியுள்ளார்கள். தற்போதுநடைபெற்று வரும் பரீட்சையில் மருத்துவ அத்தாட்சிப் பத்திரம் உணவு கையாளுபவர்கள் பெற்றிருத்தல், அச்சிட்ட தாள்களில் உணவு பொதியாக்கல், ஏனைய உணவுடனான தேவைகளுக்கு பயன்படுத்தலை தவிர்த்தல், உணவு பொருட்களை இடுக்கி அல்லது கையுறையுடன் விநியோகத்தினை மேற்கொள்ள ஆவன செய்தல், தூய்மையான குடிநீர் வழங்கல், ஊழியர்களின் தனி நபர் சுகாதாரம், சீருடை அணிந்திருத்தல், உணவு பொருட்களை தொற்று ஏற்படாதவாறு களஞ்சியப்படுத்தல், காலாவதியான பொருட்கள் பாவனையை தடை செய்து உணவுதயாரிப்பதற்கு பாவிக்கின்ற பொருட்கள், மரக்கறிவகை, இறைச்சி, மீன், முட்டை வகைகளில் தரமும் அதன் களஞ்சியப்படுத்தும் முறைமையும் உரியமுறையில் செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல், சுற்றாடல் சுகாதாரம் பேணல் என்பன முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்கள் மேற்குறிப்பிட்டவற்றை கவனத்தில்கொண்டு செயற்படுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர் என தெரிவித்துள்ளார். (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 220 | 12C |
| உருளைக்கிழங்கு | 60 | 80-100 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 300 | 300 |
| தக்காளி | 80 | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 80 | 100 | 100 |
| கரட் | 140 | 120 | 160 | 160 |
| பூசணி | 30 | 30 | 50 | 50 |
| புடோல் | 70 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 90 | 170 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 160 | 160 |
| பீற்றூட் | 80 | 80 | 120 | 140 |
| கறிமிளகாய் | 260 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 250-300 | 500 | -- | -- |
| போஞ்சி | 80 | 250 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 100 | 180 | -- |
| கீரை - 1 பிடி | 15-30. | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 30-50 | 40 | 70 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 45 | 40-45 |
| [illegible] | 80 | 90 | 120 | 130 |
| [illegible] | 160 | 200 | 100 | 100 |

# இராசி பலன்

01.02.2013
(தை 19, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.3[illegible] மணிக்கு
பஞ்சமி முற்பகல் 9.56 மணிவரை
அத்தம் மாலை 6.31 மணிவரை
இராகுகாலம் 11.06-12.36 மணிவரை
சுபநேரம் 6.36-8.06 மணிவரை
அமிர்தசித்தம்

**மேடம்** தொழில் முன்னேற்றமுண்டு, வழிபாட்டால் ஆனந்தம் உண்டாகும், உறவினர் வருகையால் குடும்பத்தில் குதூகலம் ஏற்படலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், போசன சுகமுண்டு.

**இடபம்** பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொலைபேசி வழித் தகவலால் சந்தோசம் அதிகரிக்கும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

**கடகம்** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பொருளாதார நிலை உயர்வடையும், கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள்.

**சிங்கம்** இறைவழிபாட்டால் இன்பங்கள் கூடும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சான்றோர் சந்திப்புண்டு, பேச்சில் இனிமை தென்படும்.

**கன்னி** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**துலாம்** பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பலன் பெற வேண்டிய நாள், ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், சகோதர வழி ஒற்றுமை பலப்படும், கொடுக்கல்- வாங்கல் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு.

**தனுசு** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாதியில் நின்ற பணியை மீதியும் செய்து முடிப்பீர்கள், பிறர் உதவியுண்டு, ஆரோக்கியமான நாள், வழிபாட்டடில் ஆர்வம் கூடும்.

**மகரம்** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் குறையும், தொழில் நிமிர்த்தம் புதிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கும்பம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது, குடும்பத்தில் சிறு மனக்கசப்பு ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஜனவரி மாதத்தில் 59 டெங்கு நோயாளர்கள்

## யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் 59 டெங்கு நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நோய்த்தாக்கத்திற்கு நல்லூர் மற்றும் கோண்டாவில் பிரதேசங்களினைச் சேர்ந்தவர்களே அதிகமாக உள்ளதாகவும் அத்தகவல்கள் குறிப்பிடுகின்றன.


இதேவேளை இவ் டெங்கு நோயாளர்களில் சாவகச்சேரி, காங்கேசன்துறை, இடைக்காடு ஆகிய பிரதேசங்களினைச் சேர்ந்த இராணுவத்தினரும் உள்ளனர்.

இவ்வருட முதல் ஆரம்ப மாதத்திலேயே 59 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இனிவரும் காலங்களில் இவ் எண்ணிக்கை பலமடங்காவதற்குரிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நேற்றைய தினம் சுன்னாகம், கோண்டாவிலினைச் சேர்ந்த இரு டெங்கு நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் 600 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்ததோடு இரு இறப்புக்களும் நிகழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)




நன்றி: மிரர்




## இளைஞர் வி.கழக நிர்வாக தெரிவு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் 60 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இதில் கழகத்தின் தலைவராக கே.என்.தேவதாஸ், செயலாளராக இ.பகீரதன், பொருளாளராக ச.பிரதீபன், உபதலைவராக நா.யோகீஸ்வரராஜா, உப செயலாளராக ச.விஸ்வரூபன் ஆகியோரும் 6 நிர்வாகசபை உறுப்பினர்களும் கழக காப்பாளர்களாக சு.கே.குலநாயகம், வை.சோமசுந்தரம் ஆகியோரும் கணக்காய்வாளராக இ.இராதாகிருஷ்ணனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என புதிய தலைவர் கே.என்.தேவதாஸ் அறிவித்துள்ளார். (அ-5)

## அலுவலக திறப்புவிழா

(மானிப்பாய்)

கனகரத்தினம் மகாவித்தியாலய அலுவலகம் புனரமைக்கப்பட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.18 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் வே.ஞானகாந்தன் கலந்து கொண்டு புனரமைக்கப்பட்ட அலுவலகத்தை திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் இந்நிகழ்வில் முன்னாள் அதிபர் கே.மாணிக்கம், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-23)

## ஓய்வூதிய விபரப்பட்டியலை பார்வையிடலாம்

(பண்டத்தரிப்பு)

இலங்கை சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தில் கொமம் மேற்கில் இவ்வாண்டு ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் விபரப்பட்டியல் சங்கானை பிரதேச செயலக விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

காட்சிப்படுத்தப்பட்ட விபரங்களினை பயனாளிகள் பார்வையிட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு சங்கானை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (அ-3-30)

## மரதன் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியினை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு வித்தியாலய முன்றலில் இல்லங்களுக்கிடையிலான மரதன் ஓட்டப்போட்டி நடைபெறவுள்ளது. (அ-4)

# அறுபது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நாவலடி பாலம்

(கரணவாய்)

அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடிக்கும் நாவலடிச்சந்திக்கும் இடைப்பட்ட வீதியில் காணப்படும் நாவலடிப்பாலம் சுமார் 60 வருடங்களுக்கும் மேலாக திருத்தம் செய்யப்படாமல் சேதமடைந்து காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இவ்வீதியின் பாலம் சேதமடைந்து காணப்படுவதனால் இவ்வீதியூடாக தற்போது சிறு வாகனங்கள் மட்டுமே பயணிக்கக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

அத்துடன் துவிச்சக்கர வண்டியிலும் மோட்டார் சைக்கிளிலும் மக்கள் மிகவும் ஆபத்தான நிலையிலேயே பயணிக்கின்றனர்.

இவ்வீதிப் பாலத்தினூடாக சென்ற தனியார் பாரவூர்தி (லொறி) ஒன்று கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பாலமுடைந்து குடை சாய்ந்து சேதமடைந்தமை யாவரும் அறிந்த உண்மை.

இவ்வீதியானது வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்டது மட்டுமல்லாமல் பருத்தித்துறை பிரதேச சபைக்கும் கரவெட்டி பிரதேச சபைக்கும் இடைப்பட்ட எல்லைகளை இணைக்கின்ற பிரதானமான உள்ளூர் வீதியாகக் காணப்படுகின்றது.

இவ்வீதியும் இப்பாலமுமே நீண்டகாலமாக எவ்வித திருத்தங்களும் செய்யப்படாமல் மிக ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனமெடுத்து விரைவாக இவ்வீதியையும் பாலத்தையும் புனரமைத்துத்தருமாறு பொது மக்கள் சார்பாக கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் பொ.குகதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-9-74)

# நவாலியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை

(நவாலி)

நவாலிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த பகுதியில் உள்ள வீதிகள் எங்கும் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளதால் மக்கள் அச்சத்துடனேயே பயணம் செய்ய வேண்டியுள்ளது.

அத்துடன் வாகனங்களில் பயணம் செய்யும்போது இக்கட்டாக்காலி நாய்கள் வீதிக்கு குறுக்கே ஓடுவதால் வாகனங்களுடன் தடம்புரண்டு விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே உரியவர்கள் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3)

# இணுவில் ஒலி 3 ஆவது இதழ் வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

இரு திங்கள் ஏடாக வெளிவரும் இணுவில் ஒலி சஞ்சிகையின் மூன்றாவது இதழின் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இணுவில் பொது நூலகத்தில் பொதுநூலகத் தலைவர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடை பெறும்.




இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைசிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன், சிறப்பு விருந்தினராக யா/பரமேஸ்வரா வித்தியாலய (திருநெல்வேலி) அதிபர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் ஆசியுரையினை இணுவில் பராராஜசேகரப் பிள்ளையார் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள், வரவேற்புரையை யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார், வாழ்த்துரைகளை கலாபூஷணம் பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளை, இணுவில் சைவத் திருநெறிக் கழகக் காப்பாளர் பெ.கனகசபாபதி, யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பேராசிரியர் க.தேவராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அறிமுக உரையை மா.ந. பரமேஸ்வரன், நூல்நயப்புரையை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் ம.பா.மகாலிங்கசிவம் ஆகியோர் ஆற்றவுள்ளனர். நூலின் முதற் பிரதியை சிவன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் அ.கிருபாமூர்த்தி பெற்றுக் கொள்வார். (அ-9)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(பண்டத்தரிப்பு)

யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் அதிபர் எஸ்.நொபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக முன்னாள் அதிபர் வி.சிவசுந்தரம், முன்னாள் உப அதிபர் கே.உபேந்திரன், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன், நலன்விரும்பி கே.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிறுவுநர் ஞாபகார்த்த உரையினை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை விரிவுரையாளர் எஸ்.றமணராஜா நிகழ்த்தவுள்ளார். (அ-3-30)

## விவேகானந்தர் எழுச்சி மாநாடு

(யாழ்ப்பாணம்)

மாவை இந்து பொதுச் சேவை கழகத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறும் விவேகானந்தர் எழுச்சி மாநாடு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் கழகத் தலைவர் கு.கோபிராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்திலிருந்து மாநாட்டு மண்டபம் நோக்கி விவேகானந்தரின் திருஉருவப்பட ஊர்வலம் 12.15 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## இந்து மயானம் தொடர்பான அபிவிருத்திக்குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கீரிமலை தச்சன் காடு இந்து மயான அபிவிருத்திக்குழு அமைத்தல் தொடர்பான கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஞான வைரவர் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நலன்விரும்பிகள், பிரதேச மக்கள் ஆகியோர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெல்லிப்பழை பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampuriijaffna@gmail.com




சென்.ஜோன்ஸ் கல்லூரியின்
190ஆவது ஆண்டு நிறைவினையொட்டி
பாதிக்கப்பட்ட மாணவரின்
கல்வி மேம்பாட்டு நிதிக்காக
மீண்டும் சுராங்கனி புகழ்
A.E.மனோகரனின்

# பொப்பிசை கானங்கள்

யாழ்.மண்ணின் புகழ்பெற்ற பாடகர்
பொப்பிசைச் சக்கரவர்த்தி, தென்னிந்திய திரைப்பட
நடிகர், சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்
பல ஆண்டுகளின் பின்னர் யாழ்.மண்ணில்
பாட வருகின்றார்.

புகழ்பெற்ற கண்ணன் கோஷ்டி வழி வந்த
சப்தமி புகழ் கண்ணன் முரளியின்
இசைக்குழுவின் சங்கமத்தில்....

காலத்தால் அழியாத....
பொப்பிசை கானங்களை கேட்டுப் பரவசமாக..
மீண்டும் ஒரு சந்தர்ப்பம்.....
யாழ்.மண்ணில்........
திரண்டு வாரீர் .........
உதவிக்கரம் தாரீர்....!

கட்டண விபரம் : ரூபா 1000, ரூபா 500, ரூபா 300
இடம்: சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
காலம்: எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதி (04.02.2013)
மாலை 5.30 மணிக்கு

பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்.



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 28, 12 இல் செவ்.<br>தகைமை/தொழில்: ஆங்கில பட்டதாரி<br>தொ.இ: B -1083 | பிறப்பு: 1984 இந்துவேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 2<br>உயரம்: 5'1"<br>கி.பா: 56, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1164 |
| பிறப்பு: 1983 RC<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'4"<br>கி.பா: 77.25, 7இல் செவ்.<br>தகைமை/தொழில்: (QS)<br>தொ.இ: B -1086 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 2<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: B.Com, HND (பட்டதாரி பயிலுநர்)<br>தொ.இ: G-1165 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>உயரம்: 5'5"<br>கி.பா: 43.25, 2 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: NCT Civil, Draughtsman Technical Officer<br>தொ.இ: B -1089 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>உயரம்: 5'<br>கி.பா: 22<br>தகைமை/ தொழில்: MBBS (கனடா PR)<br>தொ.இ: G -1167 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>உயரம்: 5'5"<br>கி.பா: 12<br>தகைமை/தொழில்: A/L, வியாபாரம்<br>தொ.இ: B -1092 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>உயரம்: 5'4"<br>கி.பா: 49, 12 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: MSc (கனடா PR)<br>தொ.இ: G -1168 |

சகல தொடர்புகளுக்கும்:-
## கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



What's after your A/L's...? JOIN TODAY

# CITY COLLEGE OF ENGLISH

## ENGLISH EXAMINATIONS

**IELTS** BRITISH COUNCIL

For Student Visa and Migration

IELTS பரீட்சைகள் **16.05.2013** இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

* பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள் 02.02.2013 ஆரம்பம்.
* நீங்கள் எங்கு படித்திருந்தாலும் எமது கல்லூரியில் வந்து பரீட்சைக்குப் பதிவு செய்ய முடியும்.
* IELTS பரீட்சைக்குப் பதிவு செய்யும் போது இலவச நூல்களை நாம் தருவோம்.
* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றபவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* உடனடியாக வகுப்பில் இணைந்து பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துங்கள்

வகுப்புகள் ஆரம்பம் **02.02.2013** Classes : Sat, Sun 8.30 - 11.30 am

**IELTS** கற்கப்போதுமான அளவு ஆங்கில அறிவு இல்லையெனில் முதலில் **PET** வகுப்பில் படித்தபின் **IELTS** இல் சேரலாம்.

**IELTS Registration Center for British Council.**

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரிகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி Ket (A1, A2) மட்டும்

UNIVERSITY OF CAMBRIDGE

Would you like to achieve a certificate in English which is valid for life. If so, the Cambridge ESOL high level English language certificates are the best choice for you.



### KEY English Test

A1 , A2 U.K Settlement visa வுக்கான பரீட்சையை KET KEY English Test நாளாந்த English பயன் பாட்டிற்கு உகந்த பரீட்சை. பாடங்கள் Reading and Writing Listening & Speaking. பரீட்சையில் 70% புள்ளிகள் பெற்று A2 Certificale 46 - 69 வரையிலா புள்ளிகள பெற்றால் A1 Certificat கிடைக்கும்

This exam tests the ability to cope with everyday written and spoken English at a basic, Practical level.

Cambridge University பரீட்சைகள் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் **14.05.2013** இல் நடைபெறவுள்ளன.

Barch I - 7.00 a.m - 8.00 a.m
Barch II - 8.30 a.m - 10.30 a.m
Barch III - 10.30 a.m - 12.30 a.m

வகுப்புகள் ஆரம்பம் **04.02.2013**

Leval B1 **Perliminary English Test**

PET Perliminary English Test இது ஓர் Intermediate Level பரீட்சையாகும் For those who want to use English for work and study நீங்கள் B1 தகுதியைப் பெறத்தவறுமிடத்து A2 Certificate கிடைக்கும்

PET tests written and spoken language at an intermediate level in work, study and social situations, for those who want to use English for work and study, PET is an important step towards attaining higher qualifications.

நீங்கள் சரளமாக ஆங்கிலத்தில் எழுத, நாளாந்தக் கருமங்களை ஆங்கிலத்தில் செய்வதற்கு உடனடியாக PET வகுப்புக்களில் சேருங்கள்.

வகுப்புகள் Mon - Tus - Wed - Thu வாரத்தில் நான்கு நாட்கள் 8 மணித்தியாலம் நடைபெறும்

For registration and further details contact

**CITY COLLEGE OF ENGLISH**
No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 2220384 / 077 8803887
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
(சி/2277)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்பதற்கு மட்டுமே வாயை திறக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் வாழ்கின்றோம்

## அரியம் எம்.பி.தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

**யுத்த காலத்தில் கொல்லப்பட்டவர்களை சமாதான காலத்தில் கொல்லப்பட்டவர்கள் என கூறிக் கொள்ளும் இந்த காலப்பகுதியில் அவர்களை நினைவுகூருவதற்கு தகுதியற்ற ஒரு இனமாக, அடிமைகளாக நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**

இதுதான் இலங்கை அரசின் சமாதானம் என்பதை சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கொக்கட்டிச்சோலை படுகொலையின் 26 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வில் தலைமையுரை ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாங்கள் இழப்புக்களை சந்தித்த ஒரு இனம். இறந்த எங்களது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை எங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கான அவலமாக இறந்தவர்கள் இருக்கட்டும். அவர்களை நீங்கள் நினைவுகூர முடியாது. இந்த மண்ணிலே நீங்களும் ஊமைகளாக வாழவேண்டும். நீங்கள் உண்பதற்கு மட்டுமே வாயைத் திறக்க வேண்டும் ஏன்கின்ற ஆக்கிரமிப்புக்கு மத்தியில் இந்த இனவாத அரசின் கீழ் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

கொக்கட்டிச்சோலை படுகொலையென்பது ஒரு இனப்படுகொலை. 1987 ஆம் ஆண்டு முதன்முதலில் கந்தையா வைத்தியர் மீது தீர்க்கப்பட்ட வேட்டுக்களை தொடர்ந்து பலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த படுகொலைச் சம்பவமானது அந்த காலத்தில் இடம்பெற்ற ஒரு பெரும் கொலைச் சம்பவமாக நோக்கப்பட்டது.

இது தொடர்பில் சர்வதேச சமூகத்துக்கும் காட்டப்பட்டது. இதற்கு முன்னின்று உழைத்தவர் எம்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள். இதனை சர்வதேச ரீதியில் கொண்டு சென்று கொக்கட்டிச்சோலை படுகொலையை ஒரு பிரபல்யமான படுகொலையாக பார்க்க வைத்தார்.

இந்தப் படுகொலை தொடர்பில் பல குழுக்கள் அமைக்கப்பட்டு பல்வேறு சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டன. ஆனால் அதன் விசாரணை தொடர்பிலான எதுவித தகவல்களும் அறியாத நிலையிலேயே கடந்த 26 வருடங்களாக நாங்கள் உள்ளோம்.

இவ்வாறான நிலையில் நிகழ்வுகளை நாங்கள் நினைவுகூராமல் இருப்பதற்கும் அதனை செய்யமுடியாமல் இருப்பதற்கும் இன்று எமக்கு ஏற்பட்ட நிலைமை சான்று பகிர்கின்றது.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின்னர் சமாதானம் ஏற்பட்டுள்ளதாக சொல்லப்படுகின்றது. நாங்கள் சொல்லவில்லை அரசாங்கமே சொல்கின்றது சமாதானம் என்று. எந்தளவில் சமாதானம் இருக்கின்றது என்பதை அனைவரும் இன்றைய நிகழ்வில் இடம்பெற்ற சம்பவங்களைக் கொண்டு தீர்மானித்துக் கொள்ளலாம்.


சர்வதேச சமூகம் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும். எந்தளவில் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவுகூர முடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அது வடக்காக இருக்கலாம். கிழக்காக இருக்கலாம்.

எமது விடுதலைப்போராட்டம் அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் ஏற்பட்டாலும் கூட இன்று ஒன்றையும் நாங்கள் பெறமுடியாத நிலையில் இராஜதந்திர ரீதியில் எமது விடுதலைப் போராட்டம் சென்று கொண்டிருக்கின்றது.

சர்வதேச ரீதியில் அதற்கான வேலைத் திட்டங்களில் எமது ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இறங்கியுள்ளனர். நடைபெறவுள்ள ஜெனீவா மாநாட்டில் இலங்கை அரசாங்கத்தின் இவ்வாறான அடாவடித்தனங்களை நாங்கள் சுட்டிக்காட்டவுள்ளோம். இதனை எவரும் தடுக்க முடியாது.

தமிழ்த் தேசியத்தை எவரும் சிதைக்க முடியாது. தமிழர்களை அழிக்கலாம், தமிழ்த் தேசியத்தை அழிக்க முடியாது. ஜோசப் பரராஜசிங்கத்தை அழித்ததால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை அழிக்க முடியவில்லை. ரவிராஜை அழித்ததால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழிந்து விடவில்லை.

இதை நாங்கள் பலமுறை நிரூபித்துள்ளோம். எங்கள் மக்கள் எங்கள் பின்னால் நிற்பதன் காரணமாகவே ஒரு உந்து சக்தியுடன் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்றார். (அ-2)



வவுனியா போதனா வைத்திய சாலையில் இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களை நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, பிராந்திய சுகாதார பணிப்பாளர் சத்தியமூர்த்தி உட்பட்ட உயர் அதிகாரிகள் பார்வையிட்டதைப் படத்தில் காணலாம். (படம்: என்.குமார்)

## புகையிரதத்தில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு

(பூந்தோட்டம்)

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு புறப்பட்ட புகையிரதத்தில் வவுனியா ஆலடி பகுதியில் ஒருவர் மோதுண்டு பலியாகியுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.


வவுனியா கட்டையர்குளம் சாஸ்திரி கூழாங்குளத்தை சேர்ந்த இராஜேந்திரன் ரமேஸ் (வயது32) என்பவரே இவ்வாறு பலியானதாக தெரிவித்த பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை பலியானவரது சடலம் வவுனியா பொது வைத்தியசாலையின் மரண விசாரணைகளின் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-9-266-250)

## பச்சிலைப்பள்ளி இந்தாண்டுக்குள் நிறைவான பிரதேசமாக மாறும்

### சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(கிளிநொச்சி)



பச்சிலைப்பள்ளி பிரதேசம் இந்தாண்டுக்குள் நிறைவான அபிவிருத்திகள் நிறைந்த பிரதேசமாக மாற்றமடையும். அதற்காக இன்னும் செய்யவேண்டிய பணிகள் சிலவேயுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மாசார் கிராமத்தில் போரூட் நிறுவனத்தின் பதினொரு இலட்சம் ரூபா நிதி பங்களிப்பில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத்தினை திறந்து வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மீள்குடியேற்றத்திற்கு பின்னர் மூன்றரை ஆண்டுக்குள் பளை பிரதேசத்தில் நாளுக்கு நாள் விரைவான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. எதிர்கால பளையினை கருத்தில் கொண்டு இந்த அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுகின்றன. பெருமளவுக்கு மக்களின் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பளை பிரதேசம் முழுவதும் மின்சாரம் வழங்கப்படும் இடத்து இந்த பிரதேச மக்களின் எல்லாத் தேவைகளும் தீர்க்கப்பட்டு விட்டதாகவே கொள்ள முடியும். அந்தளவுக்கு ஏனைய விடயங்கள் தொடர்பில் இங்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீதி புனரமைப்புக்கள், வீட்டுத் திட்டங்கள், பொதுநோக்கு மண்டபங்கள், ஆரம்ப சுகாதார சேவை நிலையங்கள், பாடசாலைகள் என எல்லாத்துறைகளிலும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பெருமளவு செய்யப்பட்டுவிட்டன.

மேலும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மின்சாரம் உள்ளிட்ட சில பணிகள் நிறைவுறும் போது பச்சிலைப்பள்ளி பிரதேசம் நிறைவான அபிவிருத்திகள் நிறைந்த ஒரு பிரதேசமாக மாற்றமடையும் என்பதில் சந்தேகம் இருக்காது.

எனவே, எமது மக்களுக்கும் இன்னும் பல தேவைகள், பிரச்சினைகள், குறைபாடுகள் உண்டு. ஆனால் அவை நிரந்தரமானதல்ல. கடந்த காலம் போன்று தீர்க்கப்பட்டு மக்களின் வாழ்வில் முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்படும். அதற்கு மீள்குடியேற்ற காலவாழ்வும் பிரதேசங்களின் நிலைமைகளினையும் இன்றைய எமது மக்களின் வாழ்வினையும் பிரதேசத்தின் நிலைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மிகத் தெளிவாக புரியும் எனவும் குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் விற்பனை செய்த குடும்ப பெண்ணுக்கு மரணதண்டனை

ஹெரோயின் போதைப்பொருளை கடத்தி விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பெண் சந்தேகநபர் ஒருவரை குற்றவாளியாக இனங்கண்டு நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தாயொருவருக்கே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பத்மன் சூரரே நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

21.76 கிராம் ஹெரோயின் விற்பனைக்காக 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி கடத்தி வந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட கிராண்ட்பாசை சேர்ந்த ஒருவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டை அவர் நிராகரித்த போதிலும் இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கூறி நீதிபதி மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (அ-2)

# முறைசாரா கல்வி பிரிவினரால் மாணவர்களுக்கான பயிற்சிகள்

யாழ்.கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவினரால் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகள் இன்று வெள்ளிக் கிழமை பி.ப 3 மணிக்கு கோப்பாய் மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் மனையியல்,தையல் அலங்கார வேலைப்பாடு ஆகிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறிகள் 6 மாத காலம் நடைபெறவுள்ளது.எனவே பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்து பயன்பெறுமாறு கோப்பாய் மகா வித்தியாலய அதிபர் க.வீரசிங்கம் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 0212230325 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-2)

# பயங்கரவாத இயக்கங்களுக்கு உதவி ஒத்தாசை வழங்கத்தடை

## சபைக்கு வருகிறது சட்டமூலம்

(கொழும்பு)

அல்கொய்தா மற்றும் தலிபான் அடங்கலாக தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களுக்கு உதவி ஒத்தாசை வழங்குவதை தடைசெய்யும் திருத்தச்சட்டமூலமொன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கடப்பாடு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இலங்கை அரசாங்கத்தால் மேற்படி சட்டமூலம் நாடாளுமன்றத்தில் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய பயங்கரவாதத்துக்கு நிதி வழங்கலை ஒழித்தல் (திருத்தம்) மீதான சமவாயம் என்னும் சட்டமூலம் விவாதிக்கப்படவுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை தடை செய்துள்ள பயங்கரவாத நிறுவனங்களுடன் தொடர்புறும் நிதி நிறுவனங்களை தடைசெய்யும் ஐ.நா.கடப்பாட்டை அங்கீகரிப்பதே இந்த சட்டமூலத்தின் நோக்கமாகும். ஐ.நா.இனங்கண்டுள்ள பயங்கரவாத அமைப்புகளின் பட்டியல் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அத்தகவல்கள் குறிப்பிட்டன.

ஐக்கிய நாடுகள் சபை இந்த பட்டியலை காலத்துக்கு காலம் மாற்றியமைக்கும். எமக்கு இந்த பட்டியலை ஐ.நா.பின்னர் வழங்கும். இது பின்னர் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்படும்.

அங்கத்துவ நாடுகள் யாவும் இவ்வாறு செய்யும் கடப்பாடு உடையன என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த சட்டமூலத்தின்படி பயங்கரவாத நடவடிக்கைகள் அமைப்புகளுடன் செயற்படும் எவரும் குற்றவாளியாவர்.

அல்-கொய்தா வின் நிதிகளை முடக்குவது தொடர்பாக ஐ.நா.சட்டம் இலக்கம் 45, 1968 இன் கீழ் இலங்கை அரசாங்கம் சில விதிகளை அண் மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

பயங்கரவாதத்தை ஒழிக்கும் பலவகை உபாயங்களையும் குறிப்பாக தலிபானுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் இச்சட்டமூலம் குறிப்பிடுகின்றது. (அ-2)

# இலங்கையை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவே முயற்சிக்கிறது அமெரிக்கா

## விமல் வீரவன்ச கொதிப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக வெள்ளைப் புலிகளும் இலங்கைப்புலிகளும் இணைந்து சூழ்ச்சி செய்துகொண்டிருக்கின்றன. இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் 3 பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். அவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை கூட்டத்திற்கு இலங்கைக்கு எதிராக சமர்ப்பிப்பதற்காக தகவல்கள் சேகரிக்கவே இவர்கள் இங்கு வந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

ஃவ்சிரிபாயவில்நேற்று முன்தினம்நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், அமெரிக்காவிலிருந்து வருகைதந்துள்ள மூவரும் இலங்கைக்கு எதிரான தகவல்களை திரட்டுவதற்காகவே வருகைதந்துள்ளனர். அவர் வடக்குக்குச் சென்று பிரிவினைவாதிகளையும் அமெரிக்க நன்கொடை நிதியம் பெறும் நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து வருகின்றனர்.

இவர்கள் மேலும் ஒரு நாடகத்தை அரங்கேற்றுவதற்கு சாட்சிக்காரர்களைத் தேடி வந்துள்ளனர். ஏற்கனவே இவர்கள் அரங்கேற்றிய நாடகம் தோற்றுப்போனதாலேயே மீண்டும் ஒரு நாடகத்தினை அரங்கேற்றவே வருகை தந்துள்ளனர்.

இந்த நாட்டில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர், படைத் தளபதிகளையும் மற்றும் அதிகாரிகளும் யுத்த காலத்தில் அநீதி இழைத்தவர்கள் என்ற போர்வையில் சர்வதேச நீதிமன்றத்திற்கு நிறுத்துவதற்கு முயற்சித்து வருகின்றார்கள்.

மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தில் மேலும் ஒரு நிகழ்ச்சி நிரலை இலங்கைக்கு எதிராக செயற்படுத்தவே இங்கு வந்துள்ளார்கள். அவர்கள் இலங்கையின் தற்போதைய ஆட்சிக்கு எதிராக செயற்படுபவர்களிடமிருந்து தகவல் சேகரித்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முக்கிய சாட்சிக்காரர்களாக உள்ளனர்.

அந்நிகழ்ச்சி நிரலுக்கு ஒரு சான்றாக முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை நீக்கியமையை சாட்டாகக் கொண்டு இவர்கள் மேலும் பொய்த் தகவல்களைச் சேகரிப்பதற்கே இங்கு வந்துள்ளனர். பராக் ஒபாமாவுக்கும் அவரது அதிகாரிகளுக்கும் அங்கு நித்திரைகொள்ள முடியவில்லை.

இலங்கைவரும் பிரதிநிதிகளிடம் சாட்சி சொல்வதற்கு முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை இங்கு உள்ள சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் சில முகவர்களும் முயற்சிக்கின்றனர்.

ஷிராணி பண்டாரநாயக்க குற்றம் இழைத்தவர். நாடாளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் ஊடாக மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகள் மூலம் அவர் பதவி நீக்கப்பட்டார்.

சரத் பொன்சேகாவை பயன்படுத்தி சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை தீர்மானத்தை நிறைவேற்ற சாட்சிக்காரராகவும் பாவித்தார்கள். அவர் இலங்கைக்கு எதிராகவும் பாதுகாப்புச் செயலாளருக்கு எதிராகவும் இலங்கை ஊடகங்களில் தெரிவித்த கருத்தே சில வெளிநாட்டு சக்திகளுக்கு சாட்சியாக அமைந்தது.

மேலும் இலங்கைக்கு எதிராக வேண்டுமென்று யுத்தக்குற்ற பலியை சுமத்தி ஐ.நா. மனித உரிமை பேரவையிலும் பிரேரணை ஒன்றை நிறைவேற்றினார்கள். இத்திட்டத்திற்கு சில வெளிநாடுகளில் உள்ள வெள்ளை புலிகளும் அந்த நாட்டில் வாழும் இலங்கைப் புலிகளும் சூழ்ச்சி செய்து வருகின்றனர் என்றார். (அ-2)





சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் கலைவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாண்ட்வாத்திய சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறார்களின் கலை நிகழ்வுகளையும் நிலைய ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த வகையான அழுத்தத்திற்கும் தைரியமாக முகம்கொடுப்போம்

## பிரதி சபாநாயகர்

பொருளாதாரம் மற்றும் நாகரிகமான செயற்பாடுகள் மூலம் நாடு சக்தியுடன் திகழுமாயின் சர்வதேசத்தின் எந்தவகையான அழுத்தத்திற்கும் தைரியத்துடன் முகங்கொடுக்க முடியும் என பிரதி சபாநாயகர் ஷந்திம வீரகொடி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அபிவிருத்தி பாதையில் செல்லும் போது நெருக்கடிகள் வரும். இதனை யாரும் நன்கு அறிவர். இந்த நிலையில் இலங்கைக்கும் இவ்வாறான நெருக்கடிகள் எழுந்துள்ளது. என்றாலும் இலங்கையர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இருந்தால் சர்வதேசத்தின் அழுத்தத்தை வெற்றிகொள்ள முடியும் என பிரதி சபாநாயகர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ திவிநெகும சட்டமூலத்திற்கு எதிரணியினரால் பெற்றுக் கொடுக்கப்பட்ட பிரசாரம் குறித்து கருத்து தெரிவித்தார்.

வழக்கு தொடுத்தவர்கள் கூச்சல் போட்டவர்களினால் திவிநெகுமவிற்கு நல்ல பிரசாரம் கிடைத்தது. உள்நாட்டில் மாத்திரமின்றி வெளிநாடுகளிலும் திவிநெகுமவிற்கு விளம்பரம் கிடைக்கப்பெற்றது. இப்போது வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் கேட்கிறார்கள் என்ன இந்த திவிநெகும என்று? அவர்களுக்கு கோழிக்குஞ்சு பகிர்ந்தளிப்பதே திவிநெகும என்று தான் கூறுவதாக தெரிவித்தார். (அ-2)

# பன்றிக்கு வைத்த மின்பொறி மனித உயிரைப் பறித்தது

(கண்டி)

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் மின்பொறியில் சிக்கி உயிரிழந்த நபரொருவரின் சடலத்தை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இச் சம்பவம் கட்டுகஸ்தோட்டை உல்லந்துப் பிட்டிய பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

அயல் வீடு ஒன்றுக்கு குறித்த நபர் அவ்வீட்டு உரிமையாளருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக அங்கிருந்து காட்டு வழியாகத் திரும்பியுள்ளார். அக் காட்டுப் பகுதியில் பன்றிகள் பிடிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த மின் பொறியில் சிக்கி உயிரிழந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வருகின்றது.

இதேவேளை, இம் மரணம் சம்பந்தமான திடீர் மரண விசாரணை கண்டி மேலதிக நீதவான் தனூஜா ஜயதுங்க முன்னிலையில் இடம்பெற்றது. பிரேத பரிசோதனை கண்டி சட்ட வைத்திய அதிகாரி ஏ.பீ. செனவிரத்ன தலைமையில் இடம்பெற்றது. (அ-2)

# எமது இராணுவத்தினரின் பயிற்சிக்கு அதிக கேள்வி நிலவுகின்றது

## இராணுவத் தளபதி பெருமிதம்

இலங்கை இராணுவத்தினர் வழங்கி வரும் பயிற்சி நெறிகளுக்கு பாரியளவு கேள்வி நிலவி வருவதாக இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தினர் வெளிநாட்டு படையினருக்கு பல்வேறு பயிற்சி நெறிகளை வழங்கி வருகின்றனர்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் பயிற்சி நெறிகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். வெளிநாட்டு படையினருக்காக முக்கியமான நான்கு பயிற்சி நெறிகள் வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை மற்றும் தனிப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் இந்தப் பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த கள தந்திரோபாயங்கள் தொடர்பில் பூரண விளக்கம் அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# குவைத் வர்த்தக நிலையத்தில் ஆபரணங்கள் திருட முயற்சி

## இலங்கை பெண் கைது

குவைத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் தங்க ஆபரணங்களை திருட முயற்சி செய்த இந்திய ஆணும் இலங்கைப் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வர்த்தக நிலையத்திற்கு ஜோடியாகச் சென்ற இவ்விருவரும் தங்க நகைகளை வாங்க வந்திருப்பதாகவும் அதனைக் காண்பிக்குமாறு வர்த்தக நிலைய ஊழியரிடம் கூறியுள்ளனர்.

இதனையடுத்து அங்கிருந்த மோதிரத்தை களவாட இவர்கள் முயற்சித்துள்ளனர். இதனையறிந்த ஊழியர்கள் உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

பொலிஸார் இருவரையும் கைது செய்து விசாரித்த போது அவர்களிடம் மோதிரம் இருக்கவில்லை. பின்னர் அவர்கள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு எக்ஸ்ரே எடுத்து பார்க்கப்பட்டபோது வயிற்றுக்குள் மோதிரம் இருப்பது கண்டறியப்பட்டது.

பின்னர் சந்தேக நபர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குவைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)




★ 1662 - ஒன்பது மாத முற்றுகையின் பின்னர் சீனாவின் இராணுவத் தளபதி கொக்சிங்கா தாய்வான் தீவைக் கைப்பற்றினார்.

★ 1788 - ஐசாக் பிறிக்ஸ் மற்றும் வில்லியம் லோங்ஸ்ட்ரீட் ஆகியோர் நீராவிப் படகுக்கான காப்புரிமம் பெற்றனர்.

★ 1793 - ஐக்கிய இராச்சியம் மற்றும் நெதர்லாந்து மீது பிரான்ஸ் போரை அறிவித்தது.

★ 1814 - பிலிப்பைன்சில் மயோன் எரிமலை வெடித்ததில் ஆயிரத்து 200 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1832 - ஆசியாவின் முதலாவது அஞ்சல் வண்டி சேவை கண்டியில் ஆரம்பமாகியது.

★ 1864 - டென்மார்க்-புரூசியா போர் ஆரம்பமானது.

★ 1880 - யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் முதலாவது தபால் வண்டி சேவையை ஆரம்பித்தது.

★ 1884 - ஒக்ஸ்ஃபோர்ட் ஆங்கில அகராதியின் முதற் பதிப்பு வெளியானது.

★ 1893 - தோமஸ் எடிசன் தனது முதலாவது அசையும் படத்துக்கான படப்பிடிப்பகத்தை நியூஜேர்சியில் கட்டி முடித்தார்.

★ 1908 - போர்த்துக்கல் மன்னன் முதலாம் கார்லொஸ் மற்றும் அவனது மகன் இளவரசர் லூயிஸ் பிலிப் லிஸ்பன் நகரில் கொல்லப்பட்டனர்.

★ 1913 - உலகின் மிகப்பெரிய தொடருந்து நிலையம் நியூயோர்க் நகரில் திறக்கப்பட்டது.

★ 1918 - ரஷ்யா ஜூலியன் நாட்காட்டியில் இருந்து கிரகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.

★ 1924 - சோவியத் ஒன்றியத்தை ஐக்கிய இராச்சியம் அங்கீகரித்தது.

★ 1946 - நோர்வேயின் ட்றிகிவா லீ ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டார்.

★ 1958 - எகிப்து மற்றும் சிரியா ஆகியன இணைந்து 1961 வரையில் ஐக்கிய அரபுக் குடியரசு என ஒரு நாடாக இயங்கின.

★ 1974 - பிரேசிலில் 25 மாடிக் கட்டடம் ஒன்றில் தீப்பற்றியதில் 189 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2003 - கொலம்பியா விண்ணோடம் பூமியின் வளிமண்டலத்தினுள் வெடித்துச் சிதறியதில் இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உட்பட ஏழு பேர் உயிரிழந்தனர்.

★ 2004 - சவுதி அரேபியாவில் ஹஜ் பயணத்தின் போது கூட்ட நெரிசலில் சிக்கி 251 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2005 - நேபாள மன்னர் ஞானேந்திரா நாடாளுமன்றத்தைக் கலைத்து நாட்டைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

★ 2005 - கனடா ஓரினத் திருமணத்தை சட்டபூர்வமாக்கிய நான்காவது நாடானது.

### பிறப்புகள்

★ 1905 - எமிலியோ செக்ரே, நோபல் பரிசு பெற்றவர் (இ.1989)

★ 1931 - போரிஸ் யெல்ட்சின், ரஷ்ய முன்னாள் ஜனாதிபதி (இ.2007)

### இறப்புகள்

★ 1958 - கிளிண்டன் டேவிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (பி.1888)

★ 1964 - பம்மல் சம்பந்த முதலியார், தமிழ் நாடகத்துறையின் முன்னோடி (பி.1873)

★ 197[illegible] - [illegible]ஐசன்பேர்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (பி.1901)

★ 1976 - ஜோர்ஜ் விப்பிள், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (பி.1878)

★ 1986 - அல்வா மீர்டல், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி.1902)


★ 1999 - வானம்பாடி யோகராஜ், வில்லிசை கலைஞர், நாடக ஆசிரியர், நடிகர், மேடைப்பாடகர் (பி.1948)

★ 2003 - கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை (பி.1961)

### சிறப்பு தினம்

★ ஐக்கிய அமெரிக்கா- கறுப்பின வரலாறு மாதம் ஆரம்பம்.

### கல்பனா சாவ்லா



**குழந்தைப் பருவம்**

இந்தியாவில் உள்ள அரியானா மாநிலத்தில் கர்னல் என்ற ஊரில் கல்பனா சாவ்லா ஒரு பஞ்சாபி குடும்பத்தில் 1961 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி பிறந்தார்.

இந்தியாவின் தலைசிறந்த விமான ஓட்டியும் தொழில் அதிபருமான ஜெ.ஆர். டி.டாடாவைப் பார்த்து கல்பனா சாவ்லாவிற்கு விமானம் ஓட்டும் ஆர்வம் ஏற்பட்டது.

**கல்பனாவும் நாசாவும்**

கல்பனா மார்ச் 1995 இல் நாசா விண்வெளி வீரர் பயிற்சி குழுவில் சேர்ந்தார். 1996 ஆம் ஆண்டு அவரது முதல் பயணத்திற்கு தேர்வு செய்யப்பட்டார். கொலம்பிய விண்வெளி ஊர்தியான STS-87 இல் பயணித்த ஆறு வீரர்களில் ஒருவராக பயணித்தார். 1984 இல் சோவியத் விண்கலத்தில் பயணித்த ராகேஷ் ஷர்மாவை அடுத்து விண்வெளி சென்ற முதல் இந்திய பெண் வீராங்கனை என்ற அழியா பெருமையை இவர் பெற்றார்.

STS-87 க்கு பின்னர் கல்பனா தொழில்நுட்ப வல்லுநராக விண்வெளி அலுவலகத்தில் செயலாற்றினார். அவரது செயலைப் பாராட்டி அவரது சக வல்லுநர்களே ஒரு விருதும் வழங்கினர்.

2000 ஆம் ஆண்டில் கல்பனா STS-107 இல் பயணிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த முயற்சி பலதரப்பட்ட தொழில்நுட்ப கோளாறுகளால் காலம் கடத்தப்பட்டது. ஜனவரி 16, 2003 இல் சாவ்லா மீண்டும் கொலம்பியாவிலிருந்து கொலம்பிய விண்கல விபரீதம் STS-107 இல் விண்வெளி திரும்பினார். இந்தியாவில் பிறந்து அமெரிக்க பிரஜையானவர் கல்பனா சாவ்லா. கொலம்பியா விண் கலத்தில் ஏழு விண்வெளி வீரர்களுடன் பயணம் செய்த முதல் பெண்மணி எனும் பெருமைக்கு உரியவர். 1991- 1992 இல் தனது குடும்பத்துடன் புத்தாண்டைக் கொண்டாட தனது கணவருடன் கல்பனா இந்தியா வந்திருந்தார். இதுவே அவரது இறுதி வருகையாய் அமைந்தது.

**மறைவு**

STS- 107 என்ற கொலம்பியா விண்ணோடத்தில் பறந்து பூமிக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது விண்கலம் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வெடித்துச் சிதறியது. அதில் கல்பனா சாவ்லா உயிர் இழந்தார். கல்பனா சாவ்லாவை கௌரவிக்கும் பொருட்டு நியூயோர்க் நகரிலுள்ள ஒரு சாலைக்கு அவருடைய பெயர் வைக்கப்பட்டுள்ளது.

**விருதுகள்**

கல்பனா சாவ்லாவின் மறைவுக்குப் பின் அளித்த விருதுகள்

❖ காங்கிரேசினல் ஸ்பேஸ் மெடல் ஒவ்ப் ஓனர் விருது

❖ நாசா ஸ்பேஸ் பிளைட் மெடல் விருது

❖ நாசா டிஸ்டிங்குவிஷ்ட் சர்வீஸ் மெடல் விருது

❖ டிபென்ஸ் டிஸ்டிங்குவிஷ்ட் சர்வீஸ் மெடல் விருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 32 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



"துக்கக்கண்ணீர்- என் தாய்-தந்தை நினைத்து. ஆனந்தக்கண்ணீர்- புத்தரை நினைத்து"

"புத்தர் பித்தரா நீங்கள்?"

"பித்தை அழிக்க வந்தவர்தான் புத்தர். அவர்மீது பித்துக்கொள்ள முடியாது. இதுவரை தோன்றிய மனிதப் பேரினத்தில் முக்கியமானவர் புத்தர்."

ஓர் இந்து என்ற முறையில் தன் புருவங்கள் உயர்த்திக் குறுகுறுவென்று பார்த்தான் குப்தா.

"கூர்ந்துகோளுங்கள். மனிதகுலத்திற்கு எப்போதுமே ஒருபோதை தேவைப்படுகிறது. மனிதனே காமம் என்ற ஒரு போதைக்குப் பிறந்தவன் தான். மனிதனை வழிநடத்துவதே ஒரு போதைதான். அன்பு, காதல், உரிமை, பொருள், போராட்டம், லட்சியம் எல்லாமே போதையின் மாற்றுவடிவங்கள் தாம். காமம், கோபம், ஆசைகூட உள்ளிருந்து சுரக்கும் மதுதான். இந்த போதைகளுக்கு மாற்றுமருந்து கொடுக்கத் தான் நினைத்தார்கள் மகான்கள். அவர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை போதைக்கு மாற்று இன்னொரு போதையாய்ப் போகுமென்று. மதம், அரசியல், இலக்கியம், கலை, விஞ்ஞானம் என்பவை வேறென்ன? போதைக் கெதிரான மற்றும் சில போதைகள். போதைக்கெதிராய் போதை கொடுக்காமல் மருந்து கொடுத்த முதல் மருத்துவர் புத்தர்"

"என்ன மருந்து?"

"நீயே உனக்கு ஒளியாவாய் மரணத்தின் முன் நிமிஷத்தில் தன் சீடார்களுக்கு புத்தர் சொன்ன கடைசி வாசகம் இது. இருள், ஒளி இரண்டாலும் ஆனது உலகம். அதை மாற்ற முடியாது. ஆனால், எவன் ஒருவன் தானே ஒளியாகிறானோ அவனுக்கு இருள் இல்லை. ஒளிதான் இயற்கை; இருள் செயற்கை"

"மனிதன் ஒளி என்றால் அவனை ஏன் இருள் சூழ்கிறது?"

"கொலை- களவு- காமம்- சோம்பல்- மது என்ற ஐந்தடுக்குப் போர்வையால் சூழப்பட்டிருக்கிறது ஒளியின் உள்கூடு. ஒவ்வொரு போர்வையாய் விலக்கிக் கொண்டே வா. ஒளி மட்டுமே காண்பாய்"

## எவன் ஒருவன் தானே ஒளியாகிறானோ அவனுக்கு இருள் இல்லை

குப்தா கண்மூடி மௌனியானான்.

இத்தனை ஆழமானவனா ஒரு ஜப்பானிய இளைஞன்...? பொறாமையால் பாராட்டினான்.

"காரை நிறுத்தச் சொல்லுங்கள்" பதறினான் இஷிமுரா.

நெடுஞ்சாலை ஓரத்தில் நிறுத்தினார் ஓட்டுனர். சட்டென்று கதவு திறந்து நெடுஞ்சாலையில் நின்று உடல் குலுங்கக் குலுங்க ஓங்கித் தும்மினான் இஷிமுரா.

மூன்றுமுறை தும்மலிட்டான்.

காருக்குள் கைநீட்டித் திசுத்தாள் எடுத்தான்; தூய்மை செய்தான்.

துடைத்த தாளை எங்கே இடுவது?

கண்ணுக்கெட்டிய மட்டும் குப்பைத் தொட்டி இல்லை.

தன் கோட்டுப் பையிலிட்டு மூடி மறைத்து மீண்டும் காருக்குள் அமர்ந்தான்.

"மன்னிக்க வேண்டும். இடமாற்றமல்லவா? தும்மல் வந்துவிட்டது. அதற்காகத்தான் இறங்கினேன்"

"ஏன்? காருக்குள்ளேயே தும்மித் துடைத்திருக்கலாமே"

"இன்னொரு மனிதர் உடனிருக்கையில் இருமுதல், தும்முதல், சிந்துதல், உழிழ்தல் எங்கள் கலாச்சாரத்தில் தடை செய்யப்பட்டிருக்கிறது. என்னை மன்னித்துவிடுங்கள்; வருந்துகிறேன்"

குப்தாவுக்கு அதிர்ச்சியாய் இருந்தது அந்தக் கலாசார முதிர்ச்சி.

பாட்னா நாற்பது கிலோமீட்டர்- நடுவில் சொல்லியது.

"தாய்- தந்தையரின் மரணத்துக்கத்தால் நீங்கள் தத்துவ ஞானியாகிவிட்டீர்கள் என்று தோன்றுகிறது. மரணம் தான் தத்துவத்தின் மூலமோ?"



"இல்லை குப்தா- மரணம் என்பது துக்கமில்லை; வாழ்வின் நிறைவு. உடல் அடையும் பூரணம். என்னால் பிறப்பை நேசிக்க முடியவில்லை; இறப்பையே நேசிக்கிறேன். ஏனென்றால் பிறப்பு என்பது எனக்குத் தெரியாமல் நேர்ந்த ஒரு நிகழ்வு. இரண்டு உடல்கள் உரசியபோது தெறித்துவிழுந்த தீப்பொறி. பிறப்பு என் கட்டுப்பாட்டில் இல்லை. இனி அதைத் திருத்தியமைக்கவும் வாயப்பில்லை. என் கட்டுப்பாட்டில் இருப்பதாக நான் கருதுவது என் இறப்பைத்தான். பிறப்பை வெல்ல முடியாத என்னால் இறப்பை வெல்ல முடியும்"

"எப்படி"

"நான் இறந்தபிறகும் என்னோடு இறந்துபோகாமல் இருந்து வாழும் உன்னதம் எதுவோ அதுவே நான்"

"அது எது?"

"தேடுவேன்; கண்டடைவேன்"

அதன்பிறகு முப்பது கிலோமீட்டருக்கு அவர்கள் காரில் அவர்களறியாமல் ஏறிப் பயணித்தது மௌனமும்.

"இந்தியாவில் இனி நீங்கள் காண விரும்பும் இடம் எது? டார்ஜிலிங்... சிம்லா...?"

"இல்லை"

"கங்கை- ரிஷிகேஷ்?"

"இல்லை"

"ஓ... தாஜ்மஹால்...?"

"இல்லை- விதர்பா. மகாராஷ்டிர மாநிலம் என்றான் இஷி"

"அங்கென்ன விசேஷம்?"

"இந்தியாவில் விவசாயீகள் அதிகம் தற்கொலை செய்து கொள்ளும் பிரதேசம் அதுதான்"

"அதை ஏன் நீங்கள் காண வேண்டும்?"

"நான் விவசாயி மகன்; மற்றும் விவசாயி"

"அதை முடித்துக் கொண்டு மீண்டும் ஜப்பானுக்கா?"

"இல்லை. கிழக்கே கொல்கத்தா- மேற்கே மும்பை- வடக்கே சிம்லா- இதுதான் இந்தியா என்று யாத்ரீகர்களுக்குத் தவறாகச் சொல்லப்படுகிறது. ஆனால்..."

"ஆனால்?"

"தெற்கு இல்லாமல் இந்தியா முடிவதுமில்லை; முழுமையுறுவதும் இல்லை"

"அதனால்..."

"அதனால்...?"

"என் பயணம் நீளப்போகிறது... தெற்கு நோக்கி"

•••••••••••

திண்ணையில கெடந்த கெழவன உத்து உத்துப் பாத்தான் முத்துமணி.

இது மனுச மூட்டையா? பாவ மூட்டையா?

போர்வைக்குள்ள ஒரு உலகம் இருக்க முடியுமா ஒரு மனுசனுக்கு? இந்த ஆறுக்கு ரெண்டரை திண்ணை இருக்கே... இதுதான் இந்தாளு பூமி. பொத்திப் படுத்திருக்கிற இந்தப் போர்வைதான் ஆகாயம். கண்ணு தொறந்து கெடந்தாப் பகல்; மூடிக் கெடந்தா ராத்திரி. வந்து வந்து போற நெனப்புதான் சந்திர சூரியரும் நட்சத்திரங்களும். சாகவிடாத சீக்கு ஒண்ணு இருக்கு போலயிருக்கு மனுசனுக்கு. அது வந்திருச்சு இந்தாளுக்கு.

சீக்குக்கும் சுழியனுக்குமான 'சென்மப்பகை' தீருறமாதிரி தெரியல.

ஏய் சிக்கே! ஒண்ணு நீ என்ன விட்டுப் போயிறணும்; இல்ல நான் மண்ண விட்டுப் போயிறணும்.

என் உடம்புல இல்லாத உறுப்பு மட்டும்தான் வலிக்காம இன்னும் இருக்கு. இது ஒரு பொழப்பு; இதுக்ொரு பொறப்பு. பொழைக்க வக்கில்ல; சாக தைரியமில்ல. இருந்து என்ன சொகத்தக் கண்டேன்? ஏலே எமா! வாரியா இல்லையாடா? வாடா! வக் காள ஒலி வந்துடறா.

"பெரியப்பா... பெரியப்பா"

"இதென்னாடா கூத்தா இருக்கு? எமன் வந்துட்டானா? கேட்ட சத்தம்... கேக்காத வார்த்தை... என்னியத் தானா? இல்ல காது கீது கனாக் காணுதா?"

"பெரியப்பா... முத்துமணி வந்துக்கேன். எந்திரிங்க"

வெளிய போர்வை பொத்தி, உள்ள தோலைப் பொத்திப் படுத்திருந்த எலும்புக் கூடு எந்திரிச்சு ஒக்காருது; நரைச்ச முடியோட துருத்தி நிக்குது சத்தில்லாத சவம்.

தாடியும் மீசையும் சடை புடிச்ச குடுமியுமா முழிச்சு முழிச்சுப் பாக்குது தலையோட பெறந்த தார்க்குச்சி. கண்ணுல மட்டும் உசுரு மினுக் மினுக் குன்னு மின்னிக்கிட்டிருக்கு.

"என்னியவா கூப்பிட்ட...?"

"ஆமா பெரிப்பா."

யாத்தே! என்னிய ஒறவு சொல்லிக் கூப்புடுதா ஒரு உசுரு?

முப்பது வருசமா மூத்திரம்கூட விழுகாத பூமியில பொதுபொதுன்னு மழை பேஞ்சா எப்பிடியிருக்கும்? அப்படியிருக்கு சொந்தம் அத்துப்போன சுழியனுக்கு.

(தொடரும்)

**அகோ ஐம்பூதங்களே!**

எம்மால் மாசுறாமல் உம்மையும்
உம்மால் உயிர் கெடாமல் எம்மையும்
காத்தருளுங்கள்
பிறருக்குச் சிந்தக்
கண்ணீர் கொடுங்கள்
எமக்குச் சிந்த
வேர்வை கொடுங்கள்

எங்கள் போகங்கள் பேணுங்கள்
உமிழ்நீரும் சுக்கிலமும்
வற்றாமற்காக்கும் வரமருளுங்கள்
சக்தியுள்ள வயதிலும்
சந்தர்ப்பம் உள்ள பொழுதிலும்
ஒழுக்கம் பழுத்த உள்ளம் கொடுங்கள்
தாங்க முடிந்த தோல்வி கொடுங்கள்
கர்வம் பூசாத வெற்றி கொடுங்கள்

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆறு வைத்தியர்கள்

## அம்புலிமாமா கதைகள்



தாவலபுரத்தில் வசித்துவந்த தேவநாதன் ஒரு பணக்கார வியாபாரி. எப்போதும் வியாப்ாரம், பணம், இலாபம், நட்டம் என்று மும்முரமாக ஈடுபட்டிருந்த அவனுக்கு நாளடைவில் ஏராளமான நோய்கள் உண்டாகின. எத்தனையோ வைத்தியர்களிடம் சென்றும் நோய்கள் குணமாகவில்லை.

அதைப்பற்றி தன் நண்பர் ஒருவரிடம் அவன் பேசிக் கொண்டு இருக்கையில் அவன் நண்பன் நீ வைத்தியர் அனந்தனைப்போய் பார்த்துவிட்டுவா! அவர் உன்னை குணமாக்கி விடுவார் என்றான்.

தேவநாதன் அவரை கையோடு தன்வீட்டுக்கு அழைத்து வருமாறு வேலைக்காரனை அனுப்ப சென்ற கையோடு வேலைக்காரன் தனியாகத் திரும்பிவந்து ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதில் அனந்தன் தன் கைப்பட தேவநாதன் அவர்களே! என்னுடைய கொள்கைப்படி என்னைத்தேடி என் வீட்டுக்கு வரும் நோயாளிகளுக்கு மட்டுமே நான் சிகிச்சை அளிக்கிறேன். மிகவும் வயதானவர்கள், மிகவும் நகரமுடியாத நோயாளிகள் ஆகியோர் மட்டுமே விதிவிலக்கு. அதனால் என்னிடம் சிகிச்சைபெற விரும்பினால் நீங்கள் நாளை அதிகாலை சூரிய உதயத்தில் என் வீட்டுக்கு நடந்து வாருங்கள் என்று எழுதியிருந்தார்.

பெரிய பணக்காரனான தன்னைப்பார்த்து அனந்தன் அவ்வாறு கட்டளையிடுவது தேவநாதனுக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் மறுநாள் காலை சூரியோதயத்தில் தன் மாளிகையை விட்டுப்புறப்பட்டு கால்நடையாக நடந்து அனந்தன் வீட்டுக்குச் சென்றான். அவனை வரவேற்ற வைத்தியர் கால்நடையாக நடந்து வந்தது மிகவும் சிரமமாக இருந்ததா?



என்று வினவினார்.

சிரமமாயிருக்கும் என்றுதான் நினைத்தேன். ஆனால் அப்படி இல்லவேயில்லை. காலை இளம் வெயிலில் இறந்தென்றலில் நடந்து வந்தது சுகமாக இருந்தது என்றான் தேவநாதன். பின்பு அதிருக்கட்டும். எனக்கு ஏராளமான வேலைகள் காலையில் செய்ய வேண்டியுள்ளது. அதனால் சீக்கிரம் எனக்குச் சிகிச்சை செய்து மருந்து கொடுங்கள் என்றான்.

அப்படி அவரமாக சிகிச்சை செய்யமுடியாதே! ஒன்று செய்யுங்கள்! வீட்டுக்குத் திரும்பிச் சென்று அவசரவேலைகளை செய்து முடித்துவிட்டு பின்பு இங்கே வாருங்கள் என்றார் அனந்தன். பின்பு வரும்போது கிராமத்து நதியில் நீராடிவிட்டு வாருங்கள் என்றார்.

அப்படியே தேவநாதன் தன் வேலைகளை முடித்துவிட்டு நதியில் ஸ்நானம் செய்தபின்பு வைத்தியர் வீட்டை அடைந்தான். ஆற்றில் குளித்தது எப்படியிருந்தது? என்று அனந்தன் கேட்க சுகமாக இருந்தது என்றான் தேவநாதன்.

முதலில் சாப்பிடுவோம். பின்பு சிகிச்சையை ஆரம்பிக்கலாம் என்ற அனந்தன் தேவநாதனை சாப்பிட அழைத்தான். அனந்தனின் மனைவி தட்டில் பரிமாறியவுடன் அதை தேவநாதன் உற்றுப்பார்க்க அனந்தன் உங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் தினமும் வீட்டில் அறுசுவை விருந்து சாப்பிடுவீர்கள். ஆனால் என் வீட்டில் எப்போதும் எளிய உணவுதான்! என் தோட்டத்தில் எப்போதும் எளிய உணவுதான்! என் தோட்டத்தில் விளையும் காய்கனிகளை மட்டுமே சமைத்துப் பரிமாறுகிறோம் என்று சொல்வதைக் கேட்டுக்கொண்டே தேவநாதன் தட்டில் ஒரு பருக்கை பாக்கி வைக்காமல் வழித்துச்சாப்பிட் டான். பின்பு நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டே இது போன்ற சுவையான சாப்பாட்டை நான் சாப்பிட்டதேயில்லை என்றான்.

பின்பு இருவரும் தோட்டத்தில் சென்று ஊஞ்சலில் அமர பொறுமை இழந்த தேவநாதன் எனக்கு ஏராளமாக வேலையிருக்கிறதென்று நான் சொன்னது ஞாபகமில்லையா?

உடனே அதற்கு அனந்தன் தன் சிகிச்சையைப்பற்றி ஒரு நீண்ட முன்னுரை நிகழ்த்த தேவநாதன் கண்கள் சொக்கிப்போய் அங்கேயே உறங்கிவிட்டான். அவ்வாறு நீண்ட நேரம் உறங்கிய பின் எழுந்த தேவநாதன் கடவுளே! நானா இப்படித் தூங்கினேன்? என் வீட்டில் நான் நிம்மதியாகத்தூங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்டதே என்று அதிசயித்த பின் சரி! சரி என் சிகிச்சையை இப்போதாவது தொடங்குகிறீர்களா? என்று அனந்தனை அவசரப்படுத்தினான்.

அதற்கு அனந்தன் சிகிச்சை எப்போதோ தொடங்கி விட்டது. உங்களை ஒன்று இரண்டல்ல ஆறுவைத்தியர்கள் கவனிக்கின்றனர் என்றார்.

ஆறுபேரா? யார் அவர்கள்? எங்கே இருக்கிறார்கள்? என்று தேவநாதன் கேட்டான்.

அதற்கு அனந்தன் சூரிய ஒளி, தென்றல், குளிர் நீர், தேகப்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு, ஓய்வு ஆகிய ஆறு வைத்தியர்களின் கண்காணிப்பில் நீங்கள் இருக்கிறீர்கள். இவர்களைவிட சிறந்த வைத்தியர்கள் உலகில் இல்லை. உங்களைப் போன்றவர்களன் இந்த ஆறு பேரை கவனிக்காததால் தான் உங்களை நோய்கள் பீடிக்கின்றன. அதனால்தான் உங்களை அதிகாலை கால்நடையாக நடந்து வரச் சொன்னேன். குளிர்ந்த ஆற்றுநீரில் குளிக்கச் சொன்னேன். குறைவான, எளிய சத்துள்ள உணவாக அளித்தேன். சுருக்கமாகச்சொன்னால் ஆறு பெரிய வைத்தியர்களும் உங்களுக்கு சிகிச்சை அளித்தார்கள். இந்த ஆறுபேரின் சிகிச்சை போதுமா? அல்லது ஏழாவதாக என்னுடைய சிகிச்சையும் தேவையா என்றார்.

அனந்தனை இரு கைகூப்பி கும்பிட்ட தேவநாதன் இப்போது எனக்குப்புரிந்து



விட்டது. இந்த ஆறு வைத்தியர்களே போதும். ஏழாவது வைத்தியர் தேவையில்லை யென்று நினைக்கிறேன் என்று சொல்லி விட்டு வீடு திரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுவின் அறிக்கையை காட்டியே ஐ.நாவில் பிணை வாங்கியது அரசாங்கம்

## மார்ச்மாதம் என்ன செய்யப் போகிறது-மனோ கேள்வி

**(கொழும்பு)**

**தேசியகீதம் தமிழ்மொழியில் பாடப்படுவது இந்நாட்டில் நீண்டகாலமாக நடைபெற்று வருகிறது. ஸ்ரீ லங்கா தாயே என தொடங்கும் இந்த பாடல் தமிழீழத்தை பற்றி பாடவில்லை. அது ஸ்ரீலங்கா என்ற முழு இலங்கையைப் பற்றிதான் பாடுகிறது. இந்த தமிழ்மொழியிலான தேசிய கீதத்தை இன்று இருப்பது போலவே பாடவிட்டாலே நமக்கு போதும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.**



அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்றைய தினம் கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் மேலும் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

சிங்கள, தமிழ் சொற்கள் அடங்கிய ஒரே தேசிய கீதம் என்ற புதிய யோசனையை எனக்கு தெரிய தமிழர்கள் முன்வைக்கவில்லை. அதை முன் வைத்திருப்பது அமைச்சர் வாசுதேவ நாணயக்கார. அதை இந்த ஜெனீவா மார்ச் மாத காலப்பகுதியில் முன்வைத்து அமைச்சர் சர்ச்சையை ஏற்படுத்திவிட்டார் என அவரை எதிர்த்து அரசாங்கத்தில் உள்ள தீவிரவாத கட்சிகளும் பொதுபலசேனையும் திட்டுகின்றன.

இது அரசாங்க உள்வீட்டுபிரச்சினை. இன்று நிலவும் ஜெனீவா காய்ச்சல் காரணமாக மூளை கலங்கி போய் கண்டதையும் திட்டித் தீர்க்கும் இவர்களது இந்த வேலைபற்றி நாம் ஒன்றும் செய்ய முடியாது என அவர் தெரிவித்தார்.

இன்று பிரிந்து நிற்கும் தமிழ், சிங்களம் பேசும் சமூகங்களை ஐக்கியப்படுத்தும் அற்புதமான கருவி இதுவாகும். இதைப் புரிந்து கொண்டு செயற்படுவது நாட்டை நேசிப்பவர்களின் கடமையாகும்.

கனடாவில் ஓ! கனடா என ஆரம்பிக்கும் இரண்டு தேசிய கீதங்கள் ஆங்கில, பிரான்சிய மொழிகளில் உள்ளன. பிரான்சிய மொழியில் முதலில் எழுதப்பட்ட இந்த கீதம் பின்னர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இது ஒரே நாட்டில் ஒரே அர்த்தத்தில் இரு மொழிகளில் தேசிய கீதங்கள் இருப்பதற்கு உதாரணம்.

தென்னாபிரிக்காவில் ஒரே தேசிய கீதம் உள்ளது. இதில் ஆங்கிலம், ஆபிரிக்கன் உட்பட மொத்தம் ஐந்து மொழிகளின் வார்த்தைகள் உள்ளன. இதன் மூலம் அந்த நாட்டின் ஐக்கியம் பாதுகாக்கப்படுகிறது.

இலங்கையில் ஒரே அர்த்தத்தில் இரு மொழிகளில் தேசிய கீதங்கள் உள்ளன. இதை வேண்டாம் என சொல்லி பிரச்சினையை இவர்கள் முதலில் கிளப்பினார்கள். இவர்கள் கிளப்பிய பிரச்சினைக்கு தீர்வாக இன்று ஒரே கீதத்தில் இரண்டுமொழி வார்த்தைகள் என இவர்களே சொல்கிறார்கள். தமிழ் பேசும் மக்களுக்கு இன்று தேசிய கீதத்தை விட பெரும் பிரச்சினைகள் உள்ளன. தமிழருக்கு இலங்கை தேசிய உணர்வே மறந்து விட்டது முஸ்லிம்களும் இன்று இந்த கொடுமையை அனுபவிக்க தொடங்கியுள்ளார்கள்.


இருந்தாலும் தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்படுவது இந்நாட்டில் நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது. ஸ்ரீ லங்கா தாயே என தொடங்கும் இந்த பாடல் தமிழீழத்தை பற்றி பாடவில்லை .அது இலங்கை என்ற முழு இலங்கையை பற்றிதான் பாடுகிறது. இந்த தமிழ்மொழியிலான தேசிய கீதத்தை இருப்பது போலவே பாடவிட்டாலே நமக்கு போதும்.

கற்றுக்கொண்ட ஆணைக்குழு அறிக்கையை காட்டித்தான் அரசு ஐ.நாவில் பிணை வாங்கி வந்தது. நமது ஐ.நா. தூதுக்குழு கற்றுக் கொண்ட ஆணைக்குழு சிபாரிசுகளை அமுல் செய்கிறோம் என்றும் உண்மையில் 50சதவீதம் அமுல் செய்து விட்டோம் என்றும் ஐ.நாவில் சொன்னார்கள். அப்படியானால் சரி மிகுதி 50 சதவீதத்தையும் அமுல்செய்து விட்டு அடுத்த மார்ச் மாதம் வாருங்கள் என சொல்லி உலகம் நம்மவர்களை வழியனுப்பி வைத்தது. இதே இன்று, அன்று சொன்ன இந்த அடுத்த மார்ச் வந்துவிட்டது.

இவர்கள் இந்த ஒரு வருடத்தில் கற்றுக் கொண்ட ஆணைக்குழு சிபாரிகள் எதையும் அமுல்செய்யவில்லை. அது நமக்கு தெரியும். எனவே இந்தமுறை அங்கு சென்று எந்தப்பொய்யை எப்படிச்சொல்வது என இந்த அரசாங்கம் முழித்துக்கொண்டிருக்கிறது. இதுவும் இன்று நமக்குத் தெரியும். இந்த ஆணைக்குழு அறிக்கை ஐ.நா. ஆணைக்குழு அறிக்கை இல்லை. இது இந்த நாட்டு அரசாங்கம் தயாரித்து உலகத்துக்கு அளித்த அறிக்கையாகும். இதுவே இன்று அரசாங்கத்தில் உள்ள சிலருக்கு மறந்து விட்டது.

யார் ஜெனீவா போனாலும் உண்மை பேச வேண்டும். இல்லாவிட்டால் சிக்கல் காத்திருக்கிறது. ஏனென்றால் உலகத்துக்கு இன்று உண்மை தெரியும். (அ-2)

## கற்பிட்டி கடற்பரப்பில் இறந்த டொல்பின்கள் கரை ஒதுங்கின



(கற்பிட்டி)

கற்பிட்டி கடற்பரப்பில் பெருமளவு டொல்பின்கள் மரணமாகி வருவதாக மீனவ சமூகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அப்பிரதேச மீனவர்கள், இந்த கடற்பரப்பில் கடந்த 29 ஆம் திகதி மாத்திரம் 42 டொல்பின்கள் பலியாகியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தடைசெய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி சிலரால் மேற்கொள்ளப்படுகின்ற கடற்றொழில் நடவடிக்கைகளின் போதே டொல்பின்கள் மரணிப்பதாக மீனவத் தரப்பில் சுட்டிகாட்டப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக புதிய கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை பிரதியமைச்சர் சரத்குமார குணரத்ன தெரிவிக்கையில், இதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார். (அ-2)

## உண்டியல்களில் காசு போட்டாலும் கைது செய்ய வேண்டி ஏற்படலாம்

### ஐக்கிய சோசலிசக் கட்சி தலைவர் கிண்டல்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் சட்டதிருத்தங்களுக்கு பஞ்சமே இல்லை. பயங்கரவாதிகளுக்கு நிதி திரட்டுவதை தடுக்கும் வகையில் சட்ட திருத்தங்கள் கொண்டு வரப்படவிருக்கின்றன. வணக்கஸ்தலங்களிலுள்ள உண்டியல்களில் காசு போட்டாலும் கைது செய்ய வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்று ஐக்கிய சோசலிச கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

**அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்துவோம்** எனும் தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அமெரிக்க பிரதிநிதிகளை எதிர்க்கட்சிகள் அழைக்கவில்லை. அரசாங்கமே விசாவிற்கான அனுமதியை கொடுத்தது. இவ்வாறான நிலையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சரவையில் இருக்கின்ற அமைச்சர்களுக்கு ஜனாதிபதி பாடம் நடத்த வேண்டும்.

இந்த அரசாங்கம் இன்னும் நான்கு அல்லது ஐந்து வாரங்களுக்குள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்த காலத்தில் செய்ய முடியாததை சாதாரண சட்டம் அமுலில் இருக்கின்ற காலத்தில் செய்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

48 மணி நேரம் தடுத்து வைக்கலாம் என்பது யுத்தகாலத்தைவிடவும் அபாயகரமானது. அரசியலமைப்பின் மீது எமக்கு நம்பிக்கையில்லை. அதை கிழித்து வீசிவிட்டு புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

கோவில்கள், விஹாரைகள், பள்ளிகள் மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களில் வைக்கப்பட்டுள்ள உண்டியல்களில் காசு போடுகின்றவர்களையும் இனிமேல் கைது செய்யும் வகையில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்றார். (அ-2)

## பல்கலை.மா.ஆணைக்குழுவின் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு அமைய பல்கலைக்கழகங்களில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக ஒப்புக்கொண்ட அளவுக்கு சில மாவட்டங்களில் போதியளவு மாணவர்கள் இல்லாத குறையை நிரப்புவதற்கு ஏனைய மாவட்டங்களில் இருந்து மாணவர்களை சேர்ப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்திடம் அனுமதி கோரியுள்ளது.

விதிக்கப்பட்ட சித்திப்புள்ளியை பெறாத மாணவர்களை பல்கலைக்கழகத்தில் அனுமதிப்பதை தவிர்ப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இவ்வாறு கேட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஒரு பிரேரணை வடிவில் செய்த இந்த விண்ணப்பம் கடந்த திங்கட்கிழமை பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான நீதியரசர்கள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த நீதிமன்ற செயன்முறையுடன் தொடர்பான சிலர் நீதிமன்றில் இல்லாத காரணத்தினால் இதனை விசாரிக்க முடியாது என கருத்துரைத்த நீதிமன்றம் சகல தரப்பினரையும் நீதிமன்றத்திற்கு வருமாறு அறிவிக்குமாறு பதிவாளர்களுக்கு பணித்து விசாரணையை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (அ-2)

## சடலமாக மீட்கப்பட்டவர் அடையாளம் காணப்பட்டார்

(பூந்தோட்டம்)

வவுனியா தாண்டிக்குளத்தில் டிப்பர் வாகனத்தில் இருந்து ஆண் ஒருவரின் சடலத்தினை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் தாண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள இராணுவ சிற்றுண்டிச்சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பரில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கிரிவந்துடுவ [illegible] சேர்ந்த சமந்த இந்திக்க பெரேரா (வயது-40) என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை டிப்பர் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டதற்கு அருகில் மேலும் ஒரு டிப்பர் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் இதனுடைய சாரதி நேற்று முன்தினம் காலையில் இருந்து காணாமல் போயிருப்பதால் அவர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் எவ்வாறு மரணமடைந்தார் என்பது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-9-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொப்புள்கொடி உறவுகள் எமக்காய் குரல் கொடுப்பர் எனும் எண்ணத்துடனேயே இறுதிமூச்சை விட்டனர் ஈழத்தமிழர்!

உணர்ச்சிவசப்பட்டு இயங்குபவனும் அறிவுபூர்வமாகப் பேசுபவனும் ஒரே ஆளாக இருக்க வாய்ப்பில்லை என்பது நீண்ட நெடுங்கால நம்பிக்கை. உணர்ச்சிவசப்படுபவன் அறிவுபூர்வமாகப் பேச முடியாது என்றோ அறிவுபூர்வமாகப் பேசுபவன் உணர்ச்சிவசப்படமாட்டான் என்றோ இதற்குப் பொருள். ஒரே ஆள் இரண்டாகவும் இருக்க முடியும் என்பதை ஒரு நூற்றாண்டுகளுக்கு முன் நிரூபித்தவன் எட்டயபுரத்துக் கவிஞன் சுப்பிரமணிய பாரதி. நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் அதை நிரூபித்தவன் வீரத்தமிழ்மகன் முத்துக்குமார்!

தன்னுடைய அபரிமிதமான கவிதைத்திறத்தாலும் கட்டுரை வன்மை



தீக்குளித்த முத்துக்குமார்-2009

முத்துக்குமாரின் இறுதி ஊர்வலத்தின்போது-2009

யாலும் ஒரு மகா கவியாக நிமிர்ந்து நின்றதோடுநின்றுவிடவில்லை பாரதி என்றெமது அன்னை கைவிலங்குகள் போகும்? என்றெமது இன்னல்கள் தீர்ந்துபொய்யாகும்? என்று உணர்ச்சிப் பெருக்கோடு உருக்கமாய் எழுதிவிட்டு புணர்ச்சி இன்பம் தேடி அவன் போய்விடவில்லை. எழுதிய எழுத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பதுங்கிக் கிடந்த புதுச்சேரியில் பட்டினி கிடந்து பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக இந்தியா எறிகணையை ஏவிக் கொண்டிருந்தான். 1902 இல் காந்தியின் தோழர்கள் அந்நியத்துணிகளை தீக்கிரையாக்கினார்கள் என்றால் அதற்கு 13 ஆண்டுகளுக்கு முன்பே 1906 இல் சென்னை கடற்கரையில் அந்நியத்துணிகளை தீவைத்து ஆங்கிலேய ஆட்சியாளர்களைத் திகைக்க வைத்தவன்.

உணர்ச்சி மிகுந்த பாரதி எழுதிய வரிகளில் காணப்பட்ட உலகளாவிய வரலாற்றுப் பார்வையும் திட்டவட்டமான தீர்க்கதரிசனமும் இன்றைக்கும் நம்மை வியக்கவைப்பவை. பாரதிக்கு நிகரான வரலாற்றுப்பார்வையும் தொலைநோக்குப் பார்வையும் தான் பாரதியோடு முத்துக்குமாரை ஒரே நேர்கோட்டில் கொண்டு வருகின்றன.

பிரிட்டிஷ் உளவாளிகள் நிழலெனத் தொடர்ந்த நிலையிலும் வறுமைக்கோட்டில் கிடந்த நிலையிலும் அக்கினிக்குஞ்சுகளை அடை

காக்க முடிந்தது. புதுச்சேரியில் கிடந்த அந்தப் புரட்சிக் கவிஞனால் ஏறக்குறைய அதே தளத்தில்தான் நின்று கொண்டிருந்தான் முத்துக்குமார். வசதிகளற்ற வாழ்க்கை அவனை அசதியில் ஆழ்த்திவிடவில்லை. தேடித் தேடிப் படித்தான். படித்தவை அனைத்தையும் எளிய வார்த்தைகளில் எழுத்தில் வடித்தான்.

தீக்குளிப்பதற்கு சில நாட்களுக்கு முன் எப்படி அவனால் அப்படி ஒரு மரண சாசனத்தைத் தெளிவாகவும் விரிவாகவும் எழுத முடிந்தது என்கிற வியப்பிலிருந்து அதைப் படித்தவர்களில் பலர் இன்னும்கூட விடுபடவில்லை.

சுதந்திரம்கிடைப்பதற்குபலஆண்டுகள் முன்னர் ஆனந்த சுதந்திரம் அடைவோம்என்றுபாடாமல்அடைந்து விட்டோம் என்று பாடியதற்காகப் பாராட்டப்பட்டவன் பாரதி. முத்துக்குமார் அதனிலும் ஒருபடி மேலே போகிறான்.

அமைக்கப்படப்போகிற தமிழீழத்தை அங்கீகரிக்கிற உரிமையை மட்டுமே சர்வதேசம் மேற்கொள்ளலாமே தவிர அது யாரின் தலைமையில் அமைய வேண்டும் என்பதைத் தமிழீழ மக்கள்தான் முடிபு செய்வார்கள் என்கிற முத்துக்குமாரின் வார்த்தைகள் செதுக்கிச் செதுக்கி கோர்க்கப்பட்டிருக்கின்றன.

ஒரே பாடலுக்குள் எத்தனைப் பாடல் என்பதைப்போல இந்த ஒரே வாக்கியத்தில் எண்ணற்ற பிரகடனங்கள். தமிழீழம் அமைந்தே தீரும் என்கிற உறுதி... அதை அங்கீகரிப்பதைத்தவிர சர்வதேசத்துக்கு வேறு வழி இருக்காது என்கிற தெளிவு... தமிழீழத்தின் தலைமையை எங்கேயிருந்தோ யாரோ திணிக்க முடியாது என்கிற எச்சரிக்கை... இவ்வளவு அர்த்தம் இருக்கிறது அந்த ஒற்றை வாக்கியத்தில்! இதுதான் முத்துக்குமார்!

இன்னும் ஒருபடி மேலே போய் ஈழம் தொடர்பான முடிவெடுக்கும் அதிகாரம் பான் கீ மூனுக்கு வழங்கப்படக்கூடாது என்கிறான். தெள்ளத் தெளிவாக மூன் ஒருபக்க சார்பாக செயற்பட்டு வருகிறார் என்று குற்றப்பத்திரிகை வாசிக்கிறான்... நடந்த இனப்படுகொலையில் பான் கீ மூனுக்கு நிச்சயமாக தொடர்பிருக்கிறது என்பது அம்பலமாகிவரும் இன்றைய

சூழலில் 2009 இலேயே முத்துக்குமார் அதை அழுத்தந்திருத்தமாக தெரிவித்திருப்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது. அவனது அரசியல் கூர்மைக்கு இது இன்னொரு எடுத்துக்காட்டு: முத்துக்குமார் என்ற அந்த இளம் அரசியல் அறிஞன் தன் மூச்சுக்காற்றை நிறுத்தி 4 ஆண்டு முடிவடைகிறது. அந்தக் கறுப்பு நெருப்பு நமக்குள் ஏற்படுத்திய வெப்பத்தை மேலும் மேலும் விரிவுபடுத்த வேண்டியது அவசியம்.

அங்கு கொல்லப்படும் குழந்தைகளைப் பாருங்கள். உங்கள் குழந்தைகள் நினைவு வரவில்லையா? கற்பழிக்கப்படும் பெண்களைப் பாருங்கள் உங்களுக்கு அந்த வயதில் ஒரு அக்காவோ தங்கையோ இல்லையா? என்று முத்துக்குமார் கேட்டதை நாம் ஒவ்வொருவரும் நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். மற்றவர்களை நோக்கி விரல் நீட்டுவதற்குமுன் நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விகள் இவை.

நாற்பதாயிரம் பேர்தான் செத்தார்கள் என பொய்க்கணக்கு காட்டியவர்களை நாலு சாத்து சாத்துவதற்குக்கூட வக்கற்ற சமூகமாக நாம் வலுவற்றுக் கிடக்கிறோம். யானையின் பலம் யானைக்குத் தெரியாத நிலைதான் இது. ஜோசப் ராயப்பா என்கிற துணிவான ஆயரின் அறிவுபூர்வமான கணக்கெடுப்புக்குப் பின்னர் தான் கொல்லப்பட்டவர்கள் ஒன்றரை இலட்சத்துக்கு மேல் இருப்பர் என்பது தெரிகிறது.

நமக்கு தெரிந்த பின்னரும் நாமொன்றும் கொதித்து எழுந்து விடவில்லை. சச்சின் டெண்டுல்கர் இல்லாட்டா ஊத்திக்கும்பா என்கிற கவலையில் கிடக்கிறோம். 26 மையிலில் என்ன நடக்கிறது என்பதை நாமே தெரிந்து கொண்டிருக்க முடியாதா? நம்முடைய மாணவக் கண்மணிகள் அதை உலகறியத் தெரிவித்திருக்க முடியாதா? நித்தியானந்தா மாத்திரம் நெருப்புப்பொறி மாதிரி ஒரே நொடியில் பரவிவிடுகிறதே. எங்கள் சொந்தங்கள் விரட்டி விரட்டிக் கொல்லப்பட்ட வீடியோ காட்சிகள் அந்த வேகத்தில் பரவ முடியாததற்கு நீங்களும் நானும் இல்லாமல் வேறு யார் காரணம்?

கொலைக்கு துணைபோனவர் மன்மோகன்சிங் என்று வெளிப்படையாகக் கூறிவிட்டோம். நடந்த இனப்படுகொலையை பார்த்தும் பார்க்காத மாதிரி மஞ்சள் துண்டால் கருணாநிதி கண்ணை பொத்திக் கொண்டார் என்கிற உண்மையை ஊரறியத் தெரிவித்துவிட்டோம். மேலதிகமாக நடந்த இனப்படுகொலையில் பான் கீ மூனுக்கு கண்டிப்பாக பங்கு இருக்கிறது. அந்த மனிதரையும் கூண்டில் ஏற்ற வேண்டும் என்று உரக்கக் குரல் கொடுத்திருக்கிறோம்.

இதையெல்லாம் நாம் பேசியே ஆகவேண்டும்தான். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இவ்வளவும் பேசிவிட்டு நடந்த இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த தவறிய நம்முடைய கோழைத் தனத்தை மூடிமறைக்கப் பார்ப்பது என்ன நியாயம்? சுய விமர்சனம் செய்து கொள்ளாமல் நெட்டை மரங்களைப் பேரல் நின்று புலம்புவது அயோக்கியத்தனம் இல்லையா?

இந்தியாவும் 20 நாடுகளும் கொடு

த்த ஆயுதங்களைவிட ஆபத்தானது 7 கோடி தமிழர்களின் மௌனம் தான் என்பதை இப்போதும் கூட உணராவிட்டால்... நாம் எப்போது தான் உணரப்போகிறோம்? என் எதிரிகளின் கையில் இருக்கும் ஆயுதங்களைவிட ஆபத்தானது என் நண்பர்களின் மௌனம் என்கிற **மார்ட்டின் லூதர்கிங்கின்** வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம் என தெரிந்துகொள்ள இனிமேலாவது நாம் முன்வர வேண்டாமா?

அங்கே நடந்தது போர் அல்ல திட்டமிட்ட இனப்படுகொலை. விரட்டி விரட்டி கொல்லப்பட்ட நம் சொந்தங்கள் அமெரிக்கா உதவ வரும் என்று காத்திருந்ததாகக் கதை சொன்னவர்கள் முதலில் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் நம்மைத் தவிர வேறு எவரையும் எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லை என்பதுதான் உண்மை. பல்வேறு உலகத் தொடர்புகள் மூலம் உலகே சுருங்கிவிட்ட நிலையில் என்ன நடக்கிறது என்று அறிந்து நாம் பொங்கி எழுவோம் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தார்கள் அவர்கள். மலைப்பாம்பு மாதிரி சுருண்டு கிடந்த நாம் கடைசி வரையில் அசைந்து கொடுக்கவில்லை.

ஒருநொடிக்குள் ஒன்று சேர்ந்து விடும் வாய்ப்புள்ளவர்கள் நம்மாணவர்கள்தான்! ஒட்டுமொத்த தமிழகத்தை விடுங்கள். சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள 120 கல்லூரியின் மாணவர்கள் 2 நாள்கள் நடுத்தெருவில் வந்து நின்றிருந்தால் அடுத்த கணமே போரை நிறுத்த வேண்டிய கட்டாயத்திற்கு இலங்கை



யுத்தத்தின்போது இறுதி மூச்சை விட்ட ஈழத்தமிழர் -2009

தள்ளப்பட்டிருக்கும்! முத்துக்குமாரின் உயிர்த்தியாகத்துக்குப் பின்னர் கூட அப்படியொரு முயற்சியை எங்கள் மாணவச் செல்வங்கள் எடுக்கவில்லையே ஏன்? எங்கோ ஒரு கல்லூரி... ஏதோவொரு நாள்... வகுப்புகளை புறக்கணிப்பதன் மூலம் என்ன சாதித்திருக்க முடியும்? ஒன்றுபட்டு திரண்டு போராட அரசியல் கட்சிகளுக்கு ஆயிரம் பிரச்சினை இருக்கலாம்... மாணவர்கள் அப்படித்திரளத் தடையாயிருந்தது அவர்களது பொறுப்பின்மையைத் தவிர வேறு எது?

சகலத்தையும் இழந்து சாவின் விளிம்பில் நின்றிருந்தபோதும் கடலுக்கு அந்தப்பக்கம் எங்கள் தொப்புள்கொடி உறவுகள் எங்களுக்காக பேசுவார்கள்... நாங்கள் காப்பாற்றப் படுவோம்... என்ற நம்பிக்கையை மட்டும் இறுதிவரை இழக்காமல் இருந்

தார்களே நமது சொந்தங்கள்... நமது உறவுகள்... அவர்கள் இறுதி மூச்சுவிட்டபோது குறைந்தபட்சம் நம்மை மனித இனம் என்றாவது மதித்திருப்பார்களா?

நிர்பயா என்று பெயரிடப்பட்டுள்ள துணிவு படைத்த அந்த டில்லிச் சகோதரிக்கு நியாயம் கேட்க குடியரசுத் தலைவர் மாளிகை நோக்கி ஆவேசத்துடன் முன்னேறிய டில்லி மாணவர்களின் கோபாவேசத்தை சென்னை மாணவர்களிடம் 2009 இல் காணவே முடியவில்லையே... ஏன்? அன்றாடம் எங்கள் சகோதரிகள் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாவது தெரிந்தும் கற்பழித்துக் கொல்வதை மற்றவர்களை அச்சுறுத்தும் ஒரு ஆயுதமாக பயன்படுத்துவது தெரிந்தும் தெருவுக்கு வராமல் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் அவர்களை உட்காரவைத்தது எது? இன்றும் என்னை நானே கேட்டுக்கொள்கிற கேள்வி இது!

நடந்த தவறுகளுக்கு பரிகாரமாக நாம் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது. எவ்வளவோ கடமைகள் காத்திருக்கின்றன. நடந்த இனப்படுகொலைக்கு காரணமானவர்களை ஒருவர் விடாமல் கூண்டில் ஏற்ற வேண்டியிருக்கிறது.

இலங்கை இராணுவத்துக்கு பயற்சி கொடுக்க முடியாது என்று மறுக்கிறது அமெரிக்கா. இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி கொடுத்தே தீருவோம் என்று ராகுல் தலையில் அடித்து சத்தியம் செய்யாத குறையாக அழிச்சாட்டியம் செய்கிறார் அந்தோனி. இப்படிப்பட்ட ஈவு இரக்கமில்லாத ஒரு மனிதரை அவர் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் தமிழ் நாட்டுக்குள் வரவிடலாமா நாம்? ஜனநாயக முறையில் எதிர்ப்பை தெரிவிக்கக் கூட முன்வரமாட்டோம் என்றால் நாம் யார்?

-நன்றி: இணையம்-


பாரதியின் இறுதிச்சடங்கில் பங்கேற்றவர்கள் 14 பேர்தான்என்கிற அவல வரலாற்றுடன் ஒப்பிடுகையில் முத்துக்குமாரின் உடலைத் தொடர்ந்து வந்த அந்த ஒரு இலட்சம் பேர் அதற்குப் பின்னர் எங்கே போனார்கள் என்று தேடிப்பார்க்க வேண்டியிருப்பதுதான் கொடுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளிகளின் உபயோகத்திற்கு புதிய கார்

வீல் சேரில் அமர்ந்து செல்லும் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்கள் வெளியில் சென்று வருவதற்கு அடுத்தவர்களின் உதவியை எதிர்பார்த்து இருக்க வேண்டியிருக்கிறது. இந்த குறையை போக்கும் விதமாக புதிய எலக்ட்ரிக் கார் ஒன்றை இங்கிலாந்து நிபுணர்கள் உருவாக்கியிருக்கின்றனர். கெங்கரு என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த எலக்ட்ரிக் கார் வீல் சேரில் அமர்ந்து கொண்டே கார் ஓட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. வீல் சேருடன் எளிதாக காருக்குள் ஏறி இறங்கும் வகையில் வசதிகளை கொண்டிருக்கிறது. அடுத்தவர்களின் உதவியின்றி மாற்றுத் திறனாளிகள் வெளியில் சென்று வர உதவும் இந்த புதிய எலக்ட்ரிக் கார் விரைவில் இங்கிலாந்தில் விற்பனைக்கு வர இருக்கிறது.

இந்த காரை ஹங்கேரி நாட்டை சேர்ந்த கெங்கரு. நிறுவனம் வடிவமைத்துள்ளது. இந்த கார் தற்போது இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படுகிறது.




## இக்காரின் சிறப்புக்கள்

- சுற்றுச்சூழலுக்கு குந்தகம் விளைவிக்காத வகையில் இந்த கார் பட்டரியில் இயங்கும்.
- எளிதாக இந்த காரை ஓட்டும் வகையில் மோட்டார்ஸ்சக்கிள் போன்ற ஹாண்டில்பார் கொடுக்கப்பட்டிருக்கிறது.
- சிறிய மேடை அல்லது நடைமேடையிலிருந்து வீல் சேரில் அமர்ந்தவாறே பின்புறமாக காருக்குள் சென்றுவிடலாம்.
- ரிமோட் கொன்ட்ரோல் சாவியில் இருக்கும் பொத்தானை அழுத்தினால் பின்புற கதவு திறந்து கொள்ளும். உள்ளே சென்றவுடன் ஹாண்டில்பாரில் இருக்கும் பொத்தானை அழுத்தினால் பின்புற கதவு மூடிக் கொள்ளும்
- காருக்குள் ஏறி சரியாக வீல் சேரை நிறுத்தினால் மட்டுமே கார் 'ஸ்டார்ட்' ஆகும். இதேபோன்று, கதவு சரியாக மூடாவிட்டாலும் கார் 'ஸ்டார்ட்' ஆகாது.
- ஒரு முறை சார்ஜ் செய்தால் 70 கிமீ தூரம் முதல் 110 கிமீ வரை செல்லலாம். மணிக்கு அதிகபட்சமாக 45 கிமீ வேகத்தில் செல்லும்.

# கின்னஸ் சாதனை

0-300 கி.மீ வேகத்தைத் 13.18 விநாடிகளில் அடைந்து புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளது ஹென்னிஸி வினோம் ஜிடி சுப்பர் கார். அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள எலிங்டன் விமான நிலையத்தில் அண்மையில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது. 0-300 கி.மீ வேகத்தை காற்றோற்றட்ட திசையில் 13.18 விநாடிகளில் இந்த சுப்பர் கார் எட்டியது. 0-300 கி.மீ வேகத்தை எதிர்காற்று திசையில் வெறும் 14.08 விநாடிகளில் எட்டியது. இதன் சராசரியைத்தான் கின்னஸ் சாதனையாக கருதி சான்றளிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், 13.63 விநாடிகளில் 0-300 கி.மீ வேகத்தை எட்டி புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளது ஹென்னிஸி வினோம் ஜிடி சுப்பர் கார். இதற்கு முன்னர் 0-300 கி.மீ வேகத்தை குறைந்த கால அளவில் எட்டிய கின்னஸ் சாதனையை கோயெனிக்செக் அகேரா ஆர் (17.68 விநாடிகள்) மற்றும் புகாட்டி வேரோன் ஸ்போர்ட்(22.2 விநாடிகளில்) ஆகிய கார்கள் எட்டியிருந்தன. இந்த நிலையில், அனைத்தையும் விஞ்சி மிகக்குறைந்த கால அளவில் 0-300 கிமீ வேகத்தை எட்டியிருக்கிறது ஹென்னிஸி வினோம் ஜிடி.




# இணையம் – அண்மைய ஆய்வு

உலக அளவில் எத்தனை சதவிகிதம் பேர் இணையத்தில் உலா வருகிறார்கள்? எந்த நாட்டிலிருந்து அதிகமான எண்ணிக்கையில் மக்கள் இணையத்தில் தேடுகிறார்கள்? இன்னும் எத்தனை நாடுகளுக்கு இணைய வசதி கிடைக்கவில்லை? இது போன்ற தகவல்களை, இது குறித்து ஆய்வு நடத்தி வரும் அமைப்பு வெளியிட்டுள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.


இணையத்தைப் பயன்படுத்துவோரில் 35.6% பேர் ஆசிய நாட்டவர்களே. ஒவ்வொரு மாதமும் 38 கோடியே 90 இலட்சம் ஆசிய நாட்டவர்கள் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். உலகின் மற்ற கண்டங்கள் மற்றும் பகுதிகளோடு ஒப்பிடுகையில், ஆசிய நாடுகளில்தான் அதிகமானவர்கள் இணையத்தினைப் பயன்படுத்துகின்றனர். ஆபிரிக்காவில் 100க்கு 3 பேரும், ஆசியாவில் 10 பேரும், ஐரோப்பாவில் 38 பேரும், மத்திய கிழக்கு நாடுகளில் 10 பேரும், அமெரிக்காவில் 70 பேரும், அவுஸ்திரேலியாவில் 53 பேரும் இணையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். உலக மொத்த மக்கள் தொகையில், 16.6% பேர் இணையத்தினைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர்.

இன்னும் 18 நாடுகளில் இணையம் நுழையவில்லை. வட கொரி யாவில் இணையம் பயன்படுத்துவோர் எண்ணிக்கையை அந்த அரசு தெரிவிக்கவில்லை.

5 கோடி பேரை இணையம் சென்றடைய 5 ஆண்டுகளே பிடித்தது. ஆனால், வானொலிக்கு 38 ஆண்டுகள் ஆயின. தொலைக்காட்சிக்கு எடுத்துக் கொண்ட ஆண்டுகள் 13. அமெரிக்காவில் இணையம் வழி வர்த்தகம் ஆண்டுக்கு 7% அதிகரித்து வருகிறது. இணையத்தில் மிக வேகமாக வளரும் பிரிவு சமுதாய வலைத் தளங்களாகும். இணையம் பயன்படுத்தும் உலக மக்களில், ஐந்தில் ஒருவர் தினந்தோறும் யூடியூப் தளத்தினைப் பார்வையிடுகிறார்.

சீனாவில், 2012 ஆம் ஆண்டில், இணையத்தைப் புதியதாகப் பயன்படுத்தத் தொடங்கியவர்கள் 5 கோடியே 10 இலட்சம் பேர். 2011 ஆம் ஆண்டைக் காட்டிலும் 10% கூடுதலாக, 56 கோடியே 40 இலட்சம் பேர், அங்கு இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். அங்கு மொபைல் போன், டேப்ளட் கணனி மற்றும் பிற வயர்லெஸ் சாதனங்கள் வழியாக, இணையத்தினைப் பயன்படுத்துபவர்கள் 18.1% ஆக உயர்ந்துள்ளனர். மொத்தம் 42 கோடி பேர் இந்த வழிகளில் இணையத்தை வலம் வந்தனர்.

இதற்கிடையே இன்டெல் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வு, சில விந்தையான முடிவுகளைத் தெரிவித்துள்ளது. இந்தியாவில் இணையம் பயன்படுத்தும் பெண்களில் ஐந்தில் ஒருவர், இணையப் பயன்பாடு பெண்களுக்கு ஒத்து வராதது என்று கருத்து கொண்டுள்ளனர். அவர்கள் குடும்பத்தினர் இணையம் பயன்படுத்துவதை ஏற்கமாட்டார்கள் என்றும் கூறியுள்ளனர். இந்தியாவில் சில சமுதாயங்களில், பெண்கள் தெருக்களில் தனியாக நடந்து செல்வதையே ஏற்றுக் கொள்வதில்லை என்றும், அதனாலேயே, இவர்கள் கடைவீதிகளில் இயங்கும் இணைய மையங்களுக்குச் சென்று வருவதில்லை என்ற உண்மையும் வெளியாகியுள்ளது. இது வளர்ந்து வரும் நாடுகளில், இணையத்தைப் பொறுத்தவரை ஆண், பெண்களிடையே பெருத்த வேறுபாட்டினை உருவாக்கியுள்ளது என்றும் இன்டெல் கருத்து தெரிவித்துள்ளது.



**இன்னும் 18 நாடுகளில் இணையம் நுழையவில்லை. வட கொரியாவில் இணையம் பயன்படுத்துவோர் எண்ணிக்கையை அந்த அரசு தெரிவிக்கவில்லை. 5 கோடி பேரை இணையம் சென்றடைய 5 ஆண்டுகளே பிடித்தது. ஆனால், வானொலிக்கு 38 ஆண்டுகள் ஆயின. தொலைக்காட்சிக்கு எடுத்துக் கொண்ட ஆண்டுகள் 13.**

# திருடுகிறதா..?

கூகுள் நிறுவனம் தங்களது சுதந்திரத்தில் தலையிடுவதாகவும், சில நேரங்களில் சுயவிபரங்கள் திருடப்படுகிறதோ என்ற பயம் உள்ளதாகவும் இங்கிலாந்தின் இணையப்பயனாளர்கள் கொந்தளித்துள்ளனர். அதிலும் அப்பிள் ஐபோன்களில் தான் இம்மாதிரியான தகவல்கள் கண்காணிக்கப்படுவதாக கூகுள் மீது குற்றம் சாட்டியுள்ளனர். இங்கிலாந்தில் மட்டும் சுமார் 1 கோடிக்கும் மேலான ஐபோன் பயனாளர்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அப்படி என்னதான் கூகுள் நிறுவனம் திருட்டுத்தனம் செய்தது மக்கள் ஏன் கொந்தளித்தார்கள் என்பதை நோக்குவோமானால்,

- அப்பிள் போன் பயனாளர்களின் விபரங்கள் திருடப்படுவதுடன் அவர்கள் தினந்தோறும் பயன்படுத்தும் இணையங்கள், அவர்களுக்கு பிடித்தமான விபரங்கள் எவையென கண் காணிக்கப்படுகிறதாகவும், தெரியாமல் தகவல்கள் களவாடப்படுவதாகவும் குற்றம்சாட்டியுள்ளனர்.
- கூகுள் தேடுபொறியின் நுட்பத்தினை மேம்படுத்துவதற்காகவும், விரைவான தகவல்களை பெறுவதற்காகவும் "குக்கீஸ்" என்ற தற்காலிக ஆவணத்தை நமது கணனியிலோ அல்லது மொபைல் போனிலோ நிறுவுகிறது. இதன் மூலமாக தங்களது தகவல்கள் மற்றும் சுதந்திரங்கள் பறிக்கப்படுவதாகவும் இங்கிலாந்து மக்கள் கொந்தளிப்பில் உள்ளனர். கூகுள் இதை மறுத்துள்ளது.
- தங்களது தேடுபொறியின் தேடும் தன்மையையும், தரம் மற்றும் வேகத்தை அதிகரிப்பதெல்லாம் வேறுகதை. இதை கூகுள் செய்வதற்கு முக்கிய காரணமே "ஆட்சென்ஸ்" என்ற தனது ப்ராடக்ட்டின் வருமானத்தை அதிகரிக்கவே செய்கிறது.

இங்கிலாந்தில் ஒரு கோடிக்கும் (10 மில்லியன்) மேலான அப்பிள் பயனாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும்தான் இந்த பிரச்சனையா? இல்லவே இல்லை. கூகுள் அனைத்து நாடுகளிலும், அனைத்து சாதனங்களிலும் இதைத்தான் செய்கிறது. இங்கிலாந்து இப்பொழுதுதான் 'களத்தில்' இறங்கியுள்ளது. நமக்கு இதன் அருமை காலம் கடக்கத்தான் தெரியவரும்.

விக்கி லீக்ஸ் மூலம் உலகத்தையே மிரட்டிய "ஜூலியன் ஆஸாஞ்சே" ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது, பேஸ்புக் தான் உலகிலேயே மிக மோசமான திருடன். உங்களை பற்றிய அனைத்து விவரங்களும் அவர்களின் சேவர்களில் என்றார்.

இணைய பாவனையாளர்களே.....கவனம்.....!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பூகோள வெப்பமாதல் Global Warming

பூமி தினமும் வெப்பமடைவதால் இயற்கையில் பல மாற்றங்கள் ஏற்படுவதுடன் இயற்கை சம நிலையும் பாதிப்படைகின்றது. இதனால் ஏற்படும் மாற்றங்களை அவதானித்து வருகின்றோம். அத்துடன் இதன் தாக்கங்களையும் எதிர்கொண்டு வருகின்றோம். இதற்கான காரணங்கள் பெருமளவில் மனிதர்களாகிய நம்மால்தான் ஏற்படுத்தப்படுகின்றன. இந்த உண்மையை நாம் எல்லோரும் அறிந்திருந்தாலும் தொடர்ந்தும் அத்தவறையே செய்து வருகின்றோம்.

மிக விரைவாக அதிகரித்து வரும் வாகனங்களின் பாவனை, தொழிற்சாலைகளின் தோற்றம் மற்றும் சுவட்டு எரிபொருட்கள், காபனை அடிப்படையாக கொண்ட பிற




பொருட்களின் எரியூட்டல்களினால் பெருமளவில் விடுவிக்கப்படும் ஒரு சில வாயுக்கள் வளிமண் டலத்தில் பரவுதல் பூகோளம் வெப்பமடைதலுக்கு காரணியாக அமைகிறது.


வளர்ச்சியடைந்த நாடுகளில் வாகனங்கள் தரப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பின்பே பாவனைக்கு விடப்படுகின்றன. அத்துடன் தொழிற்சாலைகளும் வருடாந்தம் தரப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் குறிப்பாக ஆசிய நாடுகளில் இத்தரப்படுத்தல் முறையாக மேற்கொள்ளப்படுவதில்லை என்பதை வேதனையுடன்குறிப்பிட்டுதான் ஆகவேண்டும்.

இனி பூகோளம் வெப்பமடைதலுக்கு காரணமான வாயுக்கள் எவை என அறிந்து கொள்வதற்கு ஆவலாக இருக்கின்றீர்களா? தொடந்து படியுங்கள் அறிந்து கொள்ளலாம்.

காபனீரொட்சைட்டு (Carbondioxide, $CO_2$) மெதேன்(Methane, $CH_4$), இரு நைதரசன் ஒட்சைட்டு(Dinitrogenoxide, $N_2O$) குளோரோ புளோரோ காபன் (Chlorofluoro carbon, CFC) ஓசோன் (ozone, $O_3$) கந்தகவீரொட்சைட்டு (Sulphurdioxide, $SO_2$) நைத்திரிக் ஒட்சைட்டு (Nitric oxide, NO) போன்ற வாயுக்கள் பூகோளம் வெப்பமடைதலுக்கு காரணமாக அமைகின்றன. இவற்றுள் காபனீரொட்சைட்டு வாயு பிரதான காரணியாக அமைகின்றது. இவ்வாயுக்கள் பச்சை வீட்டு வாயுக்கள் எனவும் அமைக்கப்படும். இவை உலகின் எப்பாகத்திலிருந்தும் தோற்றுவிக்கப்படுவதுடன் இவை பூமியில் உள்ள எல்லா சூழலியல் தொகுதிகளையும் பாதிக்கின்றது. இந்தப் பிரச்சினையானது நேரடியாகவும் மறைமுகமாகவும் மனித செயற்பாடுகளை பாதிக்கின்றது.

சூரியனில் இருந்து பெறப்படும் சக்திக்கும் பூமியினால் மீளக்கதிர் வீசப்படும் சக்திக்கும் இடையே உருவாகும் நிலையான சமநிலையினால் பூமியின் வெப்பநிலை மாறாது பேணப்படுகின்றது. இவ்வாறு பூமியின் வெப்பநிலையை சீராக பேணுவதற்கான ஒரு செயற்பாடு இயற்கையில் இடம் பெருகின்றது. ஆனால், மனிதர்களால் இச் சமநிலை தற்போது பெரிதும் குழப்பப்பட்டு வருகின்றது.

சூரியனில் இருந்து பெறப்படும் வெப்ப சக்தியானது மீண்டும் பூமியில் இருந்து கடத்தல், மேற்காவுகை, கதிர்வீசல் போன்ற முறைகளினால் சக்தி இழக்கப்படுகின்றது. அத்துடன் பூமியில் இருந்து கதிர் வீசலினால் இழக்கப்படு முன் வெப்பத்தின் ஒரு சிறிய



பகுதி மேற்காவுகையினால் முகில்களுக்கு கடத்தப்படுகின்றது. அதாவது நீரின் ஆவியாதல் வெப்ப உள்ளுறை வடிவத்தில் மேற்காவுகை வெப்பத்தை காவிச்செல்கிறது. பின் நீராவி ஒடுங்கும் போது வெப்பத்தை வெளிவிடுகிறது. இவ்வாறு பூமியிலிருந்து சக்தியை காவிச் செல்லும் கதிர்வீசல்கள் கீழ் செந்நிறப் பகுதிக்குரிய நீண்ட அளவு நீளமுடைய அலைகளாகும். இவ்வாறு காவப்படும் கதிர்கள் யாவும் அண்ட வெளியை அடையுமாயின் பூமியின் மேற்பரப்பின் வெப்பநிலை கிட்டத்தட்ட 18° C ஆக காணப்படும்.

இயற்கையில் வளி மண்டலத்தில் காணப்படும் காபனீரொட்சைட்டு, மெதேன், இரு நைதரசன் ஒட்சைட்டை, குளோரோ புளோரா காபன், ஓசோன், கந்தகவீரொட்சைட்டு, நைத்திரிக் ஒட்சைட்டு போன்ற வாயுக்களும் நீராவியும் பூமியில் இருந்து தெறிப்படையும் பெருமளவு வெப்பக் கதிர்களை அகத்துறிஞ்சிமீண்டும்பூமியைநோக்கி செலுத்துவதன் மூலம் பூமியில் இருந்து காவப்படும் கதிர்ப்புகளில் ஏறத்தாழ அரைப்பங்கு மீளவும் பூமியை வந்தடைகின்றது. இதனால் பூமியின் மேற்பரப்பின் வெப்பநிலை பேணப்படுகின்றது. இதனால் உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற கால நிலை ஏற்படுகின்றது. இச்சமநிலை தோற்றப்பாடு பச்சை வீட்டு விளைவு என்படும். எனவே, மேற்படி வாயுக்கள் பச்சை வீட்டு வாயுக்கள் என அழைக்கப்படுகின்றன. ஆனால், வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் மேற்கூறப்பட்ட மனித செயற்பாடுகளினால் பச்சைவீட்டு வாயுக்களின் செறிவு அனுமதிக்கப்பட்ட மட்டத்திலும் பார்க்க அதிகரித்து வருகின்றது. இதனால் சம பச்சைவீட்டு சமநிலை குழப்பமடைகின்றது. இதனால் புவியின்



வெப்பநிலை தொடர்ந்து அதிகரிக்கின்றது. இது பூகோள வெப்பமடைதல் (Global warm ing)-எனப்படும். (தொடரும்...)


து.பிரதீபன்
இரசாயனவியல் ஆசிரியர்,
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.


## வாரத்திற்கு ஒரு புதிர்! 77

**தற்போதுள்ள நவீன ஆவர்த்தன அட்டவணையில் உள்ள மூலகங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?**

விடைகளை 11.02.2013 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**து.பிரதீபன்**
ஆசிரியர், பிரிவு -A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 76 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கஜிஷிகா பேரின்பநாயகம்,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய்.

**புதிர் 76 இற்கான கேள்வியும் விடையும்:**

இரண்டு வேறு வேறு நேர் எண்களின் கூட்டுத்தொகையாக இரண்டு வேறுவேறு முறைகளில் எழுதக்கூடிய மிகச்சிறிய பெறுமானம்?

1+4=5, 2+3=5

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 77

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே.இல:..............................
கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேறும் சகதியுமாக காணப்படும் நாச்சிக்குடா பொதுச்சந்தை

(பூனியன்குளம்)

பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட நாச்சிக்குடா பொதுச்சந்தை எவ்வித அடிப்படை வசதிகளற்ற நிலையில் சுகாதார சீர்கேடுகளுடன் காணப் படுகிறது. இது குறித்து பிரதேச சபையினரோ சுகாதார உத்தியோ கத்தர்களோ எவ்வித கவனமும் எடுக்கவில்லை என மக்கள் தெரி விக்கின்றனர்.




இச்சந்தை மூலம் பிரதேசசபை க்கு பெருமளவான வருமானம் கிடைக் கின்ற போதும் நிரந்தர கட்டட வசதிகள் எதுவும் செய்யப்படாத நிலையில் தற்காலிக கொட்டகைக ளிலேயே வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகின் றனர்.

இதனால் அவர்களின் வர்த்தக உடமைகளின் பாதுகாப்பு கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளதுடன் வர்த்த கர்களின் மொத்தக் கொள்வனவு நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டு வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சந்தைப்பகுதியில் குறித்த பிரதேச சபையினரால் நீர்த் தாங்கியில் நீர் நிரப்பப்படும் நடை முறையும் தற்போது முற்றாக கைவி டப்பட்ட நிலையில் சந்தை வர்த்தக ர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொ டுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.


வர்த்தக நிலையங்களின் முன் னும் பொது மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளிலும் நீர் தேங்கி சந்தை சகதியாக்கப்பட்டுள்ளதோடு நுளம்பு பெருகி டெங்கு போன்ற கொடிய நோய்களும் பல தொற்றுநோய் களும் பரவக்கூடிய வாய்ப்பை ஏற் படுத்தியுள்ளது.

சந்தைக்கு வருகை தரும் வாடிக் கையாளர்கள் சந்தையா சாக்க டையா என்று கேட்கும் அளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பொதுச் சந்தையின் பிரதான வாச லில் பாரிய மரம் ஒன்று பாறி வீழ்ந்து அதன் இலைகள் சருகாகி வீழ்ந்தும் குறித்த மரம் இதுவரையிலும் அகற் றப்படாமலேயே உள்ளது.

எனவே பொதுச் சந்தையினை பராமரிக்கும் பூநகரி பிரதேச சபை யினர் மற்றும் உரிய அதிகாரிகள் இவ்விடயங்கள் தொடர்பில் நடவடி க்கை எடுப்பார்களாயின் தமது வர்த் தக நடவடிக்கையை பன்மடங்கு அதிகரிப்பதுடன் வருகை தரும் பொது மக்களின் சுகாதாரத்தையும் பாது காத்து கொள்ளலாம் என வர்த்தகர் கள் தெரிவித்துள்ளனர். (அ-5-270)

# கவிஞர் பாலகோபாலுக்கு கலாபூஷணம் விருது

(வவுனியா)



கவிஞர் நவ.பாலகோபால், அரசினால் கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக் கப்பட்டுள்ளார். மண்டைதீவைப் பிறப்பிட மாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கவிஞர் பாலகோபால் வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதம முகாமைத் துவ உதவியாளராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றவர்.

மண்டைதீவு கிராம அதிகாரி மு.நவரட் ணராஜாவின் மகனான இவர், கவியரங்குகள் பலவற்றுக்கு தலைமை கவிஞராக இருந்து சிறந்த கவிதைப் படைப்புக்களை தந்தவர்.

இவரின் கவிதைச் சிறப்பைப் பாராட்டி கிளிநொச்சி இலக்கிய வட்டம் சந்தக் கவிஞர் என்ற பட்டத்தை சூட்டியதுடன் கவிதைச் சுரங்கம் என்ற பெயரில் இவரின் கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டிருந்தது.

1984 களில் இலங்கை வானொலியில் இடம்பெற்ற பத்மரஞ்சினி என்ற நிகழ்ச்சியில் கவிஞர் பாலகோபாலனின் கவிதைகள் ஈழத்தின் தலை சிறந்த பாடகர்களால் இசைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மிக விரைவில் மற்றுமொரு கவிதைத் தொகுப்பை கவிஞர் நவபால கோபால் வெளியிடவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ந)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் கு.விமலன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நா. எதிர்வீரசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா, எச்.என்.பி. சுன்னாகம் கிளை முகாமையாளர் தி.அருணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் வருடாந்த இல்ல மெய்வல் லுநர் திறனாய்வுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் மு.மகேந்திரன் தலைமையில் இக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கஜமுகன் ஹாட்வெயர்ஸ் உரிமையாளரும் கல்வி காருண்யருமான தொழில் அதிபர் ஈ.எஸ்.பேரம்பலம் நாகரட் ணம் கலந்து கொள்ளவுள்ளார். (அ-2)

# இடம்பெயர்ந்தோருக்கான உதவிகளில் அரசியல் தலையீடுகள் வேண்டாம்

(யாழ்ப்பாணம்)

## வீ.ஆனந்தசங்கரி அறிக்கை

இடம்பெயர்ந்த மக்களுக்கென பிறநாடுகளால் மேற்கொள்ளப்படும் வீட்டுத்திட்டங்கள் தொடக்கம் நிவார ணப்பொருட்களான பால்மா விநி யோகம் வரை அரசியல் தலையீடு இருப்பதை தான் வன்மையாக கண் டிப்பதாக குறிப்பிட்டு தமிழர் விடுத லைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, அரசியல் தலையீட்டினால் மிகவும் பாதிக் கப்பட்ட ஒருவருக்கு தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்கள் கிடை க்காது போனால் அத்தகைய அரசியல் தலையீட்டை ஓர் பெரும் குற்றமாக நான் கருதுகிறேன்.

அத்துடன் அச்செயல் ஒரு குழு வின் உள் வட்டத்தில் வேற்றுமையை ஏற்படுத்துவதோடு பல்வேறு இன ங்களுக்கிடையிலும் பெரும் வேற்று மையை ஏற்படுத்தி விடும். இதுவே தற்போது இரு இனங்களுக்கிடை யில் வவுனியாவில் ஏற்பட்டுள்ளது.

சில குடும்பங்களுக்கு ஒரு மிதி வண்டியோ, தையல் இயந்திரமோ, ஓர் நீர் இறைக்கும் இயந்திரமோ கிடைக்க வில்லை. ஆனால் கிளிநொச்சியில் சில வீடுகளின் இப்பொருட்கள் அவர் களின் தேவைக்கு அதிகமாக விநி யோகிக்கப்பட்டுள்ளது. சொந்த வீடு உள்ள சிலருக்கு சொந்தவீடு இருந் தும் பல்வேறு திட்டங்கள் மூலமாக வீடுகள் கிடைத்துள்ளன. இரண்டு சில்லு, நான்கு சில்லு உழவு இயந் திரங்கள் நியாயமான முறையில் விநியோகிக்கப்படவில்லை.

ஒரு சிலரைத் தவிர இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் ஒரு நிலையில் தான் உள்ளனர். அதிகாரத்தில் உள் ளவர்கள் தமது அதிகாரத்தினை துஷ் பிரயோகம் செய்யாமல் எவ்வாறு சிற ந்த முறையில் பங்கீட்டினை செய் ய லாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிக ளுக்கு ஆலோசனை வழங்கலாம்.

மேலும் அமைச்சர்கள் பாராளு மன்ற உறுப்பினர்கள் பல்வேறு நாடுகளால் இடம்பெயர்ந்த மக்க ளுக்கு வ்ழங்கப்பட்ட பொருட்களை விநியோகிக்கும் விடயத்தில் தலையிட வேண்டாம் என்ற தீர்மானம் கடந்த மாதம் 29 ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபை கூட்டத்தில் நிறைவேற்றப் படாமை அனைவருக்கும் தெரியா மல் போனது வருத்தத்திற்குரிய தாகும் என அறிக்கையில் அவர் குறிப்பிட் டுள்ளார். (அ)

# ஹங்கேரி சபாநாயகர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

ஹங்கேரி நாட்டின் சபாநாயகர் லெஸ்லோ கோவர் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள் ளார். இலங்கையில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் அழைப்பினை ஏற்று ஹங்கேரிய சபாநாயகர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள் ளார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி வரையில் சபாநாயகர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி வரையில் சபாநாயகர் லெஸ்லோ கோவர் இலங்கையில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் அரசாங்க முக்கியஸ்தர்கள், எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள், சிவில் அமைப்புத் தலைவர்கள் ஆகியோரை இவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்வது தொடர்பில் இந்தப் பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகக் குறிப் பிட்டுள்ளார். (அ-2)


## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

- யாழ்.மாவட்டத்தில் அதி முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்று எமது நிறுவ னங்களுக்கு பெருமையீட்டித் தந்த அனைத்து மாணவர்களையும் வாழ்த்தி
- ஏனையவர்களும் சிறந்த பெறுபேறு களைப் பெற்றிட

**ஆரம்பமாகின்றது**

A/L Day Class

கலை, வர்த்தகப் பிரிவு

குறிப்பு: BARATHY ... இதே நாளில் இங்கும் Day Class ஆரம்பமாகின்றன

உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.



## வட இலங்கை சங்கீத சபை

நடாத்தும்

**சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்**

**166 ஆவது ஆராதனை விழா 2013**

**காலம் :** நிகழும் நந்தன வருடம் தைத் திங்கள் 21 ஆம் நாள் (2013.02.03) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணி முதல் பி.ப. 2 மணிவரை

**இடம் :** யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

**தலைவர்:** திரு.செ.உதயகுமார் (யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரும், வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்)

**பிரதம விருந்தினர்:**

பேராசிரியர் வி.பி.சிவநாதன் (கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள்:**

- திரு.வை.செல்வராஜா (மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடமாகாணம், மருதனார்மடம்)
- திரு.வே.தி.செல்வரட்ணம் (ஓய்வுநிலை பிரதிச் செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு

**கௌரவ விருந்தினர்கள்**

- திரு.ஆ.இராஜேந்திரன் (மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடமாகாணம், மருதனார்மடம்)
- திரு.எஸ்.பிறேமகாந்தன் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வடமாகாணம், மருதனார்மடம்
- திரு.எஸ்.நந்தகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி கல்வி வலயம்)
- திரு.எஸ்.சேதுராஜா அதிபர், யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்

**வட.இலங்கைச் சங்கீத சபை,**
யாழ்.வலயக் கல்வி அலுவலகம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

சி.சிவராஜன் - செயலாளர்

(சி-2303)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த.(உ/த) பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரம் பரீட்சை 2012 இற்கான பெறுபேறுகள் அவ்வப் பாடசாலை அதிபர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி**

**வர்த்கப் பிரிவு**

என்.நிறோஜினி 3ஏ, கே.பைரவி 3ஏ, ஆர்.மேருஷா 3ஏ, ரி.சுகன்யா 3 ஏ, பி.அருட்செல்வி ஏ2பி, ரி.திவ்யா ஏபிசி, என்.டிலக்ஷா 3பி

**விஞ்ஞானப்பிரிவு**

எல்.நிவேகா பி2சி, வை.தர்மிலி பி2சி, எஸ்.துர்க்கா பிசிஎஸ், என்.கார்த்திகா 3சி

**கலைப்பிரிவு**

என்.ஜெறோமின் 2ஏபி, கே.சியாமினி 2ஏபி, ஆர்.டினோஷா 2ஏபி, ரி.மேரி றொசாறி ஏ2பி, எஸ்.சங்கீதா ஏ2பி, பி.ஸ்ரெலா 2ஏசி, ஆர்.குணாளினி ஏபிசி, கே.டென்சியா ஏபிசி, கே.ரேணுகா ஏபிசி, என்.பார்த்திகா ஏபிசி, கே.மோகனாம்பிகை ஏபிசி, பி.சாளினி ஏபிசி, பி.சஜிக்கா ஏபிசி, என்.நாகதர்சினி ஏ2சி, ஏ.அனஸ்ரெலா ஏ2சி, எஸ்.டக்ஷாயினி ஏசிஎஸ், ரி.மயூரதி 3பி, வ.வாசினி 3பி.

**யா/இடைக்காடு மகாவித்தியாலயம்**

**கணிதப்பிரிவு**

ந.சாருசன் 3ஏ, சி.அனுதீபன் 2சிஎஸ்.

**உயிரியல் பிரிவு**

ம.பொன்வேல் 2பிசி, தி.தினேஸ்குமார் 3சி, த.சிந்துஜா – பிசிஎஸ்.

**கலைப்பிரிவு**

த.கலைச்செல்வி ஏ2பி, வ.நிறைஞ்சனா ஏபிஎஸ்.

**யா/ஞானாசாரியார் கல்லூரி**

**கலைப்பிரிவு**

டி.மதுமிதா 2ஏபி.

**வர்த்தகப்பிரிவு**

பி.பிரியா 3பி, என்.துவாரகன் பிசிஎஸ், பி.மாதுரி 3சி, என்.தனுசியா 3சி.

**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

**உயிரியல் பிரிவு**

**(ஆங்கில மொழி மூலம்)**

சி.சுமிதா 3ஏ, ந.மாதங்கி 2ஏபி, சு.பிருந்தா 2ஏபி, இ.ஜெனோஷா ஏ2பி, ர.அனுசிதா ஏபிசி, கு.தனுஷியா 3பி, சி.சரண்ணியா 3பி.

**உயிரியல் பிரிவு**

**(தமிழ்மொழி மூலம்)**

மி.மிதுரிகா 3ஏ, ந.சரணியா 3ஏ, பூ.திலக்ஷி 3ஏ, பா.சயானி 3ஏ, ச.கோபிகா 3ஏ, வி.சயானி 3ஏ, அ.அபிராமி 3ஏ, சு.மேஜினி 2ஏபி, ஜெ.ஜெனிதா – 2ஏபி, இ.ஹஸ்தனி 2ஏபி, ஜெ.சௌத்ரி 2ஏசி, ஆ.துஷியா 2ஏசி, ற.சாம்பவி ஏ 2பி, த.கீர்த்திகா ஏ2பி, ரா.லமேறிகா ஏபிசி, ர.லக்ஷனா ஏபிசி, வா.நிலக்ஷி ஏபிசி, க.லக்ஷி ஏபிசி, சு.தரண்யா ஏபிசி, த.துஷாயினி ஏபிசி, கு.சரண்யா ஏ2சி, ம.சரண்யா 3பி, ர.கோபிகா 3பி, ம.றேலங்கி 3பி, ஞா.சருண்யா 3பி, சி.நிருத்திகா 3பி, சி.தர்சிகா 3பி.

**கணிதப்பிரிவு**

**(தமிழ்மொழி மூலம்)**

ம.விதுர்சா 3ஏ, பா.பாலினி 2ஏபி, சி.ஷர்மி 2ஏபி, கி.சஜிதா 2ஏபி, கா.சர்மிலா 2ஏபி, வை.கிருஷாந்தி ஏ2பி, க.கீர்த்தனா ஏபிசி, நா.புராதனி ஏபிசி, ச.ஸ்ரீபரா ஏபிசி, சி.துஷானி ஏபிசி, ம.லிபியா ஏபிசி, வி.மீருஜாஏபிசி, பு.சஞ்சீகா ஏ2சி, தே.தீபிஷாலினி ஏ2சி, தி.வைதேகி ஏ2சி,கு.நிஜனி 3பி, கி.சிவதர்சினி 3பி.

**வர்த்தகப்பிரிவு**

தி.இந்துஜா 3ஏ, ம.சரணியா 3ஏ, ரா.சசிகா 3ஏ, க.சயானி 3ஏ, கி.தனுசியா 3ஏ, இ.அனோஜிதா 3ஏ, தி.கம்ஷாயினி 2ஏபி, ச.நாராயினி 2ஏபி, ஜெ.சுமனஜா 2ஏபி, அ.வி.விதுஷா 2ஏபி, சு.பவதாரணி ஏ2பி, அ.சாம்பவி ஏ2பி, கோ.அபிலாஷினி ஏ2பி, கி.பஞ்சுகா ஏ2பி, அ.தரமிகா ஏ2பி, ம.வைஷ்ணவி ஏபிசி, ஜோ.நீருஜா ஏ2சி, க.நிரோஜினி 3பி.

**கலைப்பிரிவு**

சி.மதுஷா 3ஏ,ப.அம்பிகை ஏ2பி, தெ.வாசுகி ஏ2பி, வி.வைஷ்ணவி 3பி, ஜெ.குபேரகா 2ஏபி, ஜெ.விவேகா 2ஏசி, கோ.டென்ஷியா ஏபிசி, சி.கமலவாணி ஏபிசி, த.நிஷாலினி ஏபிசி, து.பிரசாந்தினி ஏபிசி, ஜெ.கிரிதா ஏ2சி, அ.அ.ஜெ.மேரி இஸபெல்லா ஏபி எஸ், த.சந்துஷா ஏபிஎஸ்.

**யா/மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை**

**உயிரியல் பிரிவு**

ச.வேணிலன் 3ஏ, பு.திருமாறன் ஏ2பி, இ.குகப்பிரியா பி2சி, அரண்ராஜ் 3சி, தர்சன் 3சி, பகவதி 3சி, மு.தர்சனா 3சி.

**கணிதப்பிரிவு**

ந.கிருசாந்த் 2ஏபி, ஜெ.பிறேமன் 2ஏபி, இ.பகீரதன் 2ஏசி, வா.சுவேதாரசன் ஏபிசி, ஜெ.ஜெயக்கமலன் பி2சி,கே.வேணுதாஸ் பிசிஎஸ்,வெ.தர்சா 3சி, ச.கோகுலன் 3சி.

**வர்த்தகம்**

ப.பகீரதி 3ஏ, ஞ.கீர்த்திகா 3ஏ, மு.கிருஸ்ணா 2ஏபி, ந.விலாசினி 2ஏசி, க.தேனுகா ஏ2எஸ், க.பகீரதா 2பிசி.

**கலைப்பிரிவு**

சி.ஸ்ரீகௌதமி 2ஏபி, க.நேமினா ஏ2பி, ஞா.மேரிரிலாஷா ஏ2பி, அ.உதயசாந்தினி ஏபிசி, ஆ.அபிதா ஏபிசி, ஞா.சேருசன் ஏபிஎஸ், கு.கோபிராம் ஏசிஎஸ், அ.கஜன் ஏசிஎஸ், பிரியங்கா ஏசிஎஸ், குலவேணி 3பி, ச.ஜெருசனா 2பிசி, தா.நேதாஜினி 2பிசி, ஸ்ரீ.சர்வக்ஜன் 2பிசி, சி.ஜெருசாந்தினி 2பிசி, ப.மதிவதனி 2பிசி, க.கபிரா 2பிசி.

**யா/ ஹாட்லிக் கல்லூரி**

**கணிதப்பிரிவு**

பா.கபிலன் 3ஏ, சு.கிருஷாந்த் 3ஏ, க.செந்தாழன் 3ஏ, பு. தாஸ்மதன் 3ஏ, ப.பானுகோபாலன் 3ஏ, ச.நிசாந்தன் 3ஏ, ஸ்ரீ.சரத்பஹ்வன் 3ஏ, ஞா. டுசாந்தன் 2ஏபி,சி.கமலகண்ணன் 2ஏபி, த.கஜன் ஏ2பி, கு.சுதர்சன் 2 ஏ பி,க .பிரசாந் ஏ2பி.

**உயிரியல் பிரிவு**

ஸ்ரீ.இலங்கீரன் 3ஏ,பா.துவாரகன் 2ஏபி, சி.செந்தூரன் 2ஏபி.

**வர்த்தகப்பிரிவு**

ச.பரதன்3ஏ, ம.கோணேஸ்வரன் 3ஏ, நா.தினேஷ் 2ஏபி, இ.அன்பரசன் 2ஏசி, கு.ராஜ்குமார் ஏ2பி, மு.செந்தான் 2ஏசி.

**கலைப்பிரிவு**

பா.சூரியா ஏபிசி, சி.நந்தக்குமார் ஏபிசி .

# சிறுவயது கனவு நனவாகிவிட்டது

## கணிதப் பிரிவில் மாவட்டமட்டத்தில் முதலிடம் பெற்ற பா.கபிலன்

(கரவெட்டி)

க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்று கணித பிரிவில் சாதனை படைத்த பாலகோபாலன் கபிலன் தனது சிறுவயதுக் கனவு நனவாகியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் க.பொ.த உயர்தர பரீட்சையில் கணித பிரிவில் தோற்றி சித்தியடைந்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,புலோலி தெற்கில் வசித்து வரும் மேற்படி மாணவன் தனது ஆரம்ப கல்வியை புற்றளை மகா வித்தியாலயத்தில் கற்று தரம் 5 புலமைப் பரீட்சையில் 153 புள்ளிகளை பெற்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இணைந்து கொண்டதாக தெரிவித்தார்.

தனது குடும்பம் 5 அங்கத்தவர்களை கொண்ட மிகவும் மகிழ்வான குடும்பம் என்றும் தந்தையார் எழுதுவினைஞராக கடமையாற்றுவதாகவும் தாயார் வீட்டு வேலைகளை கவனித்து வருவதாகவும் அண்ணா கொழும்பு பல்கலைக்



கழக மருத்துவ பீடத்தில் கல்வி கற்று வருவதாகவும் அக்கா கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை பல்கலைக்கழகத்தில் தொடர்பாடல் கற்கை நெறியை கற்று வருவதாகவும் தெரிவித்தார். எதிர்காலத்தில் பொறியியலாளராகி தனது சமூகத்திற்கும் நாட்டிற்கும் சிறந்த சேவையை வழங்கவுள்ளேன் என அவர் தெரிவித்தார்.

தான் கல்வி கற்ற காலத்தில் ஊக்குவித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், சக மாணவர்கள் மற்றும் தனது குடும்பத்தினருக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன் என்றார். (அ-3-24)

# மொழி பெயர்ப்பு நூல் வெளியீடு

பூப்பந்தாட்ட வரலாறும் விதிமுறைகளும் எனும் மொழி பெயர்ப்பு நூல் வெளியிட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலைவன் பாடசாலை மண்டபத்தில் அதிபர் புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் வாழ்த்துரையினை கண்டாவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் இராஜகுலசிங்கமும் வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வகுமாரனும் நிகழ்த்த வெளியீட்டுரையை புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய உடற்கல்வி ஆசிரியர் பா.பார்த்தீபன் நிகழ்த்தவுள்ளார்.

நூல்ஆய்வுரையினைகிளிநொச்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்பி.விஷ்ணு, யாழ்.மாவட்டதில் விளையாட்டுத்துறை அதிகாரி டி.என்.மோகன தாஸ், யாழ் மாவட்ட உடற்கல்வி பயிற்றுவிப்பாளர் தர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (அ-3-266)

# விடாமுயற்சியுடன் கற்றால் அனைவரும் வெற்றி பெறலாம்

## உயிரியல் பிரிவில் யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மி.மிதுரிகா

(யாழ்ப்பாணம்)

நான் ஒரு வைத்தியராகி எனது சமூகத்திற்கு சேவையாற்றுவதே என்னுடைய இலட்சியமாகும் என க.பொ.த உயர்தர பரீட்சையில் உயிரியல் பிரிவில் யாழ். மாவட்டத்தில் முதல் பெறுபேறு பெற்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவியான மிகுந்தன் மிதுரிகா கூறினார்.

தனது பரீட்சை பெறுபேறுகளின் வெற்றி குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் கடுமையாக இரவு பகல் எனப் பாராது படித்தேன். அதற்கு தற்போது சிறந்த பெறுபேறு எனக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

விடாமுயற்சியுடன் யார் வேண்டுமானாலும் கல்வி கற்றால் அவர்களும் எனது பெறுபேறினை விட உயர்ந்த பெறுபேற்றினை பெற்றுக் கொள்ள முடியும்.

நான் சிறந்த வைத்தியராகி எனது சமூகத்தினருக்கு சேவையாற்றுவதற்கே விரும்புகின்றேன்.

இங்கே படித்தேன். இங்கேயே எனது சேவையும் தொடரும்.எனது



கடின முயற்சியே என்னை இன்று இந்நிலைக்கு உயர்த்தியுள்ளது.

என்னுடைய கல்விக்கு ஊக்கமளித்த என்னுடைய அம்மா, அப்பா, எனக்கு கற்பித்த ஆசிரியர்கள் எனது கனவினை நனவாக்க ஒத்துழைத்த உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு இவ்விடத்தில் நன்றி கூற விரும்புகின்றேன்.

தென்மராட்சி உசனைச் சேர்ந்த குறித்த மாணவி மிதுரிகாவின் தந்தை விவசாயப் பீட பேராசிரியர் குணசிங்கம் மிகுந்தன். தாயார் விவசாய பீட இயந்திரவியல் துணை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி துஷ்யந்தி மிகுந்தன். (அ-4)

# கற்ற பாடங்களை அடிக்கடி மீட்டுப் பார்க்க வேண்டும்

## வர்த்தக பிரிவில் ஆங்கிலமொழி மூலத்தில் முதலிடம் பெற்ற ம.சிவறோசன்

(யாழ்ப்பாணம்)

பரீட்சையில் சித்தியடைய வேண்டுமானால் ஒவ்வொரு நாளும் பாடசாலையிலும் சரி தனியார் கல்வி நிலையங்களிலும் சரி கற்கும் விடயங்களை மீட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும் என வார்த்கப் பிரிவில் ஆங்கிலமொழி மூலத்தில் 3 ஏ பெற்று யாழ்.மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் மகாமயம் சிவறோசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறானதொரு பெறுபேற்றினை நான் எதிர்பார்த்திருக்கவில்லை. இருப்பினும் தென்பகுதி பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யக்கூடிய தகுதியான பெறுபேற்றினை பெற்றுள்ளேன். இந்தப் பெறுபேறு எனக்குஎல்லையற்றமகிழ்ச்சியைகொடுத்துள்ளது.

எதிர்காலத்தில்பரீட்சைக்குதோற்றவுள்ள மாணவர்கள் பரீட்சைக்கு முன்பு தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளாமல் நாளாந்தம் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க



வேண்டும்.

பாடசாலைகளிலும் சரி தனியார் கல்வி நிலையங்களிலும் கற்கும் விடயங்களை அன்றைய தினமே மீட்டுப் பார்க்க வேண்டும். அவ்வாறு கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தால் பரீட்சைக்கு சில மாதங்களுக்கு முன்போ சில நாட்களுக்கு முன்போ தயார்படுத்த வேண்டிய தேவை ஏற்படாது.

மேலும் ஆசிரியர்கள், பெற்றோர்களின் சொற்கேட்டு கல்வியினை தொடர வேண்டும் எனவும் அவர்களுக்கு மாணவர்கள் மதிப்பளிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார். (அ-6)

# உருத்திரபுரம் ம.வித்தியாலய மாணவி முதலிடம் பெற்றார்

(சிவநகர்)

கடந்த 2012 ஆம்ஆண்டின் க.பொ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி கிளி.உருத்திரபுரம் மகா வித்தியாலய மாணவி தர்மராசா ஈழவாணி கலைப்பிரிவில் 2ஏசி பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவது நிலையை பெற்றுள்ளார்.

அமிர்தலிங்கம் தர்சனா கலைப் பிரிவில் ஏபிசி மாவட்ட நிலையில் 17 ஆவது நிலையையும் கோபால கிருட்ஷ்ணன் கஜேந்தினி கலைப் பிரிவில் ஏபிசி பெற்று கிளிநொச்சி மாவட்ட நிலையில் 26 ஆவது நிலையையும் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் போர்ச் சூழலில் மிகவும் பாதிப்படைந்த நிலையில் மீள்குடியேறிய பின் மேற்படி பாடசாலை மாணவர்கள் தொடர்ச்சியாக சாதனை படைத்து வருவது குறிப்பிடத்தக்கது.(அ-3-254)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தங்கள் குழந்தையை அடித்து எழுப்புவதைவிட ஒரு முத்தம் கொடுத்து எழுப்புவது சிறந்தது.

-இங்கர்சால்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தோளுக்கு மூத்தால் தோழன் என்பதன் பொருள் அறியோமோ!

தென் இந்திய திரைப்பட நடிகர் பிரசாந்திடம் உங்கள் ஆருயிர் நண்பர் யார் என்று ஊடக வியலாளர்கள் கேள்வி தொடுக்கின்றனர்.

அதற்கு நடிகர் பிரசாந்த், எனது ஆருயிர் நண்பர் எனது தந்தை என்று பதிலளிக்கிறார்.

பிரசாந்தின் பதில் ஊடகவியலாளர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருந்தாலும் அதற்குள் இருக்கக்கூடிய உண்மையை நாங்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக எங்கள் பெற்றோர்கள் இதனை ஊன்றிக் கவனிப்பது மிகவும் அவசியமானதாகும்.

பொதுவில் எங்கள் பண்பாட்டில் தந்தையானவர் வயதுவந்த தனது மகனுடன் கூடியிருந்து கதைப்பதைத் தவிர்த்துக் கொள்வதுடன்,

வாலிபப் பருவத்தை அடைந்த தனது மகனுடன் ஒரு குறிப்பிட்ட இடைவெளியைப் பேணுவதில் தந்தையர்கள் முனைப்புக் காட்டுகின்றனர்.

தூக்கித் தோளில் வைத்து கொஞ்சிக்குலாவிய தனது பாச மகனுடன் கதைப்பதில் அவனுக்கு அறிவுரை கூறுவதில் தந்தையர்கள் ஒரு இடைவெளியைப் பேணுவது எங்கள் இளம் பிள்ளைகள் பாதை மாறிப் பயணிப்பதற்கு காரணமாகி விடுகின்றது.

தோளுக்கு மூத்தால் தோழன் என்ற பழமொழி எத்துணை சிறப்பானதாக இருக்கின்ற போதிலும் அதற்கு வேறுவிதமான கற்பிதங்களைக் கொடுத்து அந்தப் பழமொழியின் தத்துவத்தை இழந்து போகின்றோம்.

உண்மையில் பிள்ளைகள் ஒரு வயதைக் கடந்துவிட்டால் பெற்றோர்கள் அவர்களுக்கு நல்ல நண்பர்களாக மாறவேண்டும்.

அப்போதுதான் பிள்ளைகள் தங்களின் மன ஆதங்கங்களை பெற்றோருக்கு எடுத்துக் கூறவும் வெளிச்சூழலில் தாங்கள் சந்திக்கின்ற இடர்பாடுகளைப் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக வளர்ந்த பிள்ளைகளின் கருத்துப் பரிமாற்றத்திற்கு தந்தையர்கள் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்காமல் மகா தவறு இழைத்து விடுகின்றனர்.

இதன் காரணமாக இளைஞர்கள் திசைமாறிச் செல்லுகின்ற பரிதாப நிலை ஏற்பட்டு விடுகின்றது.

இத்தகைய நிலைமைகளுக்கான காரணங்களை சுட்டுவிரலால் காட்டி நிற்காமல் அந்தச் சுட்டு விரலை எங்கள் பக்கம் திருப்புவோமாக இருந்தால் எங்கள் மனக் கவலைகளுக்கு பரிகாரம் தேட முடியும்.

ஆகையால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக தந்தையர்கள் ஆண் பிள்ளைகளுக்கு நல்ல நண்பனாக -நல்ல ஆசானாக -நல்ல ஆலோசகனாக இருப்பது மிகவும் அவசியமானதாகும்.

இதனைப் பெற்றோர்கள் செய்யாதவரை எங்கள் பிள்ளைகள் தொடர்பில் நாம் கொண்டுள்ள கவலைகள் தீரப்போவதில்லை.

# மருத்துவர் சிவசங்கரின் கைது குறித்து விசாரணை

### யாழ். மனித உரிமை பிராந்திய இணைப்பாளர்

மருத்துவர் சிவசங்கர் சட்ட முறைகளுக்கு அமைவாக கைது செய்யப்பட்டாரா என்பது குறித்து நாம் விசாரணை மேற்கொள்ளவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி கொக்காவில் முகாம் இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்ட மருத்துவர் சிவசங்கர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இக்குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இராணுவத்தினரால் முன்வைக்கப்பட்டு மாங்குளம் பொலிசாரினால் மருத்துவருக்கு எதிராக அறிக்கையும் தயாரிக்கப்பட்டது.

மருத்துவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நியாயமானது என அவரது தாயார் மனிதவுரிமை ஆணைக்குழுவினரிடமும் கூறியிருந்தார். இது தொடர்பிலான முறைப்பாடு மனித உரிமை ஆணைக்குழுவில் செய்திருந்தார்.

இந்நிலையில் குறித்த மருத்துவர் மீது இராணுவத்தினரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மாங்குளம் பொலிஸாரினால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையினை தாம் கோரியுள்ளதாகவும் சட்ட முறைகளுக்கு அமைவாகவும் உண்மையான குற்றச்சாட்டுக்களுடனான மருத்துவர் சிவசங்கர் கைது செய்யப்பட்டாரா எனவும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மருத்துவர் உரிய முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளாரா என்பது குறித்தும் தாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இவை தொடர்பில் தாய்மார்களும் பொலிஸாரிடம் அறிக்கை கோரியுள்ளதாகவும் கூறினார். (அ-4)

# சட்டவிரோத குடியேறிகளுக்கு புகலிடம் வழங்கப்படமாட்டாது

### ஆஸி எதிர்க் கட்சி தலைவி தெரிவிப்பு

(சிட்னி)

அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக நுழைந்தவர்களை அங்கிருந்து திருப்பியனுப்பியதன் காரணமாக இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு வரும் படகு அகதிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக அந்நாட்டின் குடிவரவுத்துறை அமைச்சர் கிரிஸ்போவன் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் அவுஸ்திரேலியா 700 இலங்கையர்களை கட்டாய ரீதியில் திருப்பியனுப்பியதாகவும் இது சட்டவிரோத குடியேறிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த உதவியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இவ்வருடம் ஜனவரி மாதத்தில் இலங்கையிலிருந்து மூன்று படகுகளில் மாத்திரமே அகதிகள் வந்ததாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை கடல் வழியாக சட்ட விரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குள் குடியேறியவர்களுக்கு புகலிடம் அளிக்கப்படமாட்டாது என அவுஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவி ஜூலியா பிஷொப் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் மேற் கொண்டு வரும் முயற்சி குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கின் கல்வி அபிவிருத்திக்கு அவுஸ்திரேலியா கூடுதலான ஒத்துழைப்பு வழங்கும். இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் குறித்து உன்னிப்பாக அவதானிக் கப்படும் என பிஷொப் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஒவ்வொரு நாளும் குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுங்கள்

### புதுக்குடியிருப்பு பிரதேச சபையிடம் மக்கள் கோரிக்கை

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களில் குப்பை அகற்றும் வாகனங்கள் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டும் குப்பை அகற்றுவதால் குப்பைகள் தேங்கி காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பிரதேச சபைக்குட்பட்ட 19 கிராமங்களிலும் குப்பை அகற்றும் வாகனங்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மட்டுமே குப்பை அகற்றுகின்றனர்.

இவ்வாறு குப்பைகள் தேங்கி கிடப்பதால் இலையான்கள் பெருகி காணப்படுவதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது.

இதனால் சுகாதார சீர்கேடு இடம் பெறுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு நாளும் குப்பை அகற்றுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள ஆவன செய்யு மாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

# படிப்பகத்தின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வை கணபதி படிப்பகத்தின் 46 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தேர்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கணபதி பாலர் பாடசாலை மண்டபத்தில் கணபதி படிப்பக நிர்வாகத்தலைவர் ச.ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.பகீரதன், பொலிகண்டி மேற்கு கிராமசேவகர் சி.தவனேஸ்வரன், வல்லை நகரபிதா ந. அனந்தராஜ் மற்றும் நகரசபை செயலாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)




வழிபாட்டுத்தலங்கள் பற்றிய குறிப்புகள் நாயன்மார்களுடைய பாடல்களிலே விரிவாக உள்ளன. சிவனுடைய திருத்தலங்களிலே மிகச்சிறந்த தலம் திரு உத்தரகோச மங்கையாகும். உத்தரகோச மங்கையென்பது பாண்டி நாட்டிலுள்ள சிவதலம். இது தத்துவங்களிலுண்டாகும் வினாக்களுக்கு விடை கூறும் தொகையாகிய நூலினை இறைவன் மெய்யடியார்களுக்கும் இறைவிக்கும் உபதேசஞ்செய்து அவ்விறைவியோடு இருக்கும் தலம் எனக் கூறப்படுகிறது. இத்திருத்தலத்தின் இயற்கைச் சூழலை மணிவாசகர் பாடலில் அழகாகப் பதிவு செய்துள்ளார்.

கோயிற்சூழல் மிக அழகானது. வண்டுகள்தேனாகிய இனிய உணவைத் தேடும்போது பாடும் விளரிப் பண்ணின் ஒலி கேட்கும் பூஞ்சோலை கோயிலை வலம்வரும்போது வண்டுகளின் இனிய பண்ணொலி மனதை மகிழ்ச்சி செய்யும். அங்கே உறையும் இறைவன் திருக்கோலத்தை வழிபட உள்ளே செல்லும்போது இறைவனுடைய ஆற்றல் நினைவுக்குவரும். அதைப்பாடலில் மணிவாசகர் விளக்கிக் காட்டுகிறார்.

திரு உத்தரகோசமங்கையென்னும் திருத்தலத்திலே அரசனாக விளங்குபவன் இறைவன். பகைவருடைய முப்புரங்களையும் பகைத்து வலிய நிலை பெற்ற மேருமலையாகிய வில்லினால் அழலம்பைச் செலுத்தி எரித்த பேராற்றல் வாய்ந்தவன். அத்தகைய இறைவனுடைய அருளால் இந்த உடம்பைப் போக்கவேண்டும். இறைவனுடைய திருவடிகளை அடைந்து உய்ய வேண்டும். இதுவே மணிவாசகருடைய நோக்கம். உடம்பால் அனுபவிக்கும் துன்பங்களை இறைவனால்தான் நீக்க முடியும். பொலிகின்ற நின்தாள் புகவேண்டும் என்ற மணிவாசகருடைய விருப்பம் எல்லோருக்கும் தேவையானது. உலக இன்பங்களையே நாடி நிற்கும். உடலை ஒழிப்பதுவே வழிபாட்டின் உண்மையான பொருள் என்பதை மணிவாசகர் பாடலில் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்.

இறையருளால் திருவடி சேர வேண்டுதல் செய்யும் மணிவாசகர் விடுதி கண்டாய் என்னுந் தொடரைப் பல பாடல்களிலே பயன்படுத்தியுள்ளார். என்னை நீ கைவிட்டு விட எண்ணுகின்றாயே என இறைவனிடம் ஐயத்தோடு வினவுகின்றார். நேரில் இறைவனிடம் திருவடி தீட்சை பெற்றாலும் மணிவாசகர் மனம் இன்னும் பக்குவப்படவில்லை. இறைவனை மீண்டும் நேரிற் காணும் வாய்ப்புத் தனக்குக் கிடையாது என்றே அவர் எண்ணுகிறார். இறைவனைப் பிரிந்த பின்னர்தான் மீண்டும் உலகியல் வாழ்வில் ஈடுபட்டமையால் மனப்பக்குவம் அற்றவனெனக் கருதுகிறார்.

உத்தரகோசமங்கையில் அவர் பெற்ற இறையனுபவத்தை முற்றாக மறக்கச் செய்த உடம்பை அவர் வெறுக்கிறார். ஆனால் அந்த உடம்பை அவரால் அழிக்கமுடியாது. மனிதன் தன்னுடைய உடலைத் தானே அழிப்பது தற்கொலையாகும். இச்செயல் தீவினையின் பாற்படும். எனவே உலக இன்பங்களையே நாடும் யாக்கையை இறையருள் மூலம்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

நீக்கவேண்டும். அதற்காகவே இறைவனை வழிபடவேண்டும். இறைவனைச் சேர்ந்து அவன் திருவடிக்கீழ் இருப்பதற்காக உத்தரகோசமங்கை திருத் தலத்திலே வழிபடும் மணிவாசகர் மனம் தனக்காக மட்டுமன்றி எல்லோருக்காகவும் இறைவனிடம் வேண்டுதல் செய்கிறது.

பாலிகின்ற நின்றாள் புகுதப் பெற்
றாக்கையைப் போக்கப் பெற்று
மெலிகின்ற வென்னை விடுதி கண்
டாயளி தேர் விளரி
ஒலி நின்ற பூம்பொழில் உத்தரகோச
மங்கைக் கரசே
வலி நின்ற திண் சிலையா லெரித்
தாய்புர மாறுபட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பயிற்சி ஆட்டத்தில்

# டேவிட் வோனருக்கு கை எலும்பு முறிவு


## இன்றைய போட்டியில் பங்கேற்கமாட்டார்

அவுஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் மோதும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

இதற்காக அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் பெர்த்தில் வலைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அதிரடி மன்னன் டேவிட் வோர்னர் காயமடைந்தார். சக வீரர் மிட்செல் ஜான்சன் வீசிய பந்து அவரது இடது கையை பதம் பார்த்தது. 'ஸ்கான்' பரிசோதனையில் அவரது பெருவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. இதனால் மேற்கிந்தியத் தீவுக்கு எதிராக இன்று மற்றும் 3 ஆம் திகதி நடைபெறும் முதல் இரு ஆட்டங்களில் இருந்து அவர் விலகினார். இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் மருத்துவர் கெவின் சிம்ஸ் கூறுகையில், எலும்பு முறிவு இலேசானதுதான்.

இருப்பினும் மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான அடுத்த இரண்டு ஆட்டங்களில் அவர் விளையாடமாட்டார். அதன் பிறகு காயத்தன்மை எப்படி இருக்கிறது என்பதை பரிசோதித்து, இனிவரும் ஆட்டங்களில் விளையாட வைப்பது குறித்து முடிவு செய்வோம் என்றார். அவருக்கு பதிலாக உஸ்மான் கவாஜா சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே மைக் ஹஸ்ஸி, ரிக்கிபாண்டிங் ஓய்வுபெற்றுவிட்ட நிலையில், இப்போது முன்னணி துடுப்பாட்டவீரர் 26 வயதான டேவிட் வோர்னர காயமடைந்திருப்பது அந்த அணிக்கு பின்னடைவாக கருதப்படுகிறது.



தெ.ஆ.வீரர் ஹாசிம் அம்லா


# துணைத் தலைமைப் பொறுப்பை துறக்க முடிவு

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் பந்து வீச அதிக நேரம் எடுத்து கொண்டதால் தென்னாபிரிக்க அணியின் தலைவர் டிவில்லியர்சுக்கு இரண்டு ஒருநாள் போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து துணை தலைவர் ஹாசிம் அம்லாவை, தலைமைப் பொறுப்பை ஏற்க அணி தேர்வு குழு கேட்டுக் கொண்டது. ஆனால் தனது துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தவேண்டி இருப்பதால் தலைமைப் பொறுப்பை ஏற்க மறுத்துவிட்டார். இதனால் அந்த ஆட்டங்களில் டுபிளிஸ்சிஸ் தலைவராகச் செயற்பட்டார். இந்த நிலையில் துணை தலைவர் பதவியையும் விரைவில் துறக்க முடிவு செய்து இருப்பதாக ஹாசிம் அம்லா தெரிவித்திருக்கிறார்.

# பந்தை எறிந்துவிட்டு படம் காட்ட தயாராகின்றார் ஹர்பஜன் சிங்

**சினிமா ஒரு நல்ல தொழில். படம் எடுப்பது ஆத்ம திருப்தி தரும். அதை விட முக்கியமாக நிறைய சம்பாதிக்கலாம்.**





இந்திய அணியின் சுழல் நாயகன் திரைப்படத் தயாரிப்பாளராக அவதாரம் எடுக்கிறார். அண்மைக்காலமாக இந்திய அணியில் இடம் கிடைக்காமல் தவித்துவரும் இவர் தற்போது சினிமாவினுள் காலபதித்துள்ளார்.

படம் எடுப்பதால் ஆத்ம திருப்தி கிடைக்கிறதோ இல்லையோ, நன்கு சம்பாதிக்க முடியும் என்பது ஹர்பஜனின் கருத்தாக உள்ளது.

இது குறித்து ஹர்பஜன் சிங் கூறுகையில், ஒவ்வொரு கிரிக்கெட் வீரரும் தனியாக ஏதாவது ஒரு தொழில் வைத்துள்ளனர். விளையாட்டைத் தவிர நல்லதொரு வியாபாரமும் அவசியம்தான்.

சினிமா ஒரு நல்ல தொழில். படம் எடுப்பது ஆத்ம திருப்தி தரும். அதை விட முக்கியமாக நிறைய சம்பாதிக்கலாம்.

பஞ்சாபி சினிமா தற்போது ஆரோக்கியமாக உள்ளது. எனக்கும் அதுதான் சரியாக வரும். எனவே பஞ்சாபி மொழியில் படம் தயாரிக்க ஆர்வமாக உள்ளேன். கவர்ச்சிகரமான தொழிலாகவும் இது எனக்குத் தெரிகிறது. முதலில் 2 படங்கள தயாரிக்கத் திட்டமிட்டுள்ளேன். இருப்பினும் கிரிக்கெட்டை முழுமையாக விட்டு விடமாட்டேன்.

அதேபோல பாலிவுட்டிலும் சில நடிகர்களுடன் கலந்தாலோசித்து வருகிறேன். 2 படங்களுக்கான இயக்குநர்களை முடிவு செய்துவிட்டேன். விரைவில் படத் தயாரிப்பு குறித்த விபரம் வெளியிடுவேன்.

இரு படங்களும் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படும். ரசிகர்கள் இதை ரசிப்பார்கள். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இப்படங்கள் திரையிடப்படும். படத் தயாரிப்போடு சரி, நான் நடிக்கமாட்டேன். கண்டிப்பாக இதை நம்பலாம்.

ஏற்கனவே யுவராஜ் சிங்கின் தந்தை யோகிராஜ் சிங், பஞ்சாபி திரைத்துறையில் இருக்கிறார். அவர் 36 படங்களை அங்கு தயாரித்துள்ளார். 'பஞ்ச்வுட்' என்று பஞ்சாபி திரைத்துறை செல்லமாக அழைக்கப்படுகிறது.

ஹர்பஜன் சிங் இதுவரை 99 சர்வதேச டெஸ்ட் போட்டிகளிலும், 229 சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முழுநேர உறுப்பினராக ஹசான் திலகரட்ண



முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் தலைவர் ஹசான் திலகரட்ண கிரிக்கெட் தெரிவுக்குழுவின் முழுநேர உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான நியமனம் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகேவினால் வழங்கப்பட்டது. சனத் ஜயசூரிய தலைமையிலான புதிய கிரிக்கெட் தெரிவுக்குழு அண்மையில் நியமிக்கப்பட்டது. இதன் முழுநேர உறுப்பினராக செயற்பட முடியாது என ஹேமந்த விக்ரம ரத்ன தமது பதவியில் இருந்து விலகினார்.

இதனையடுத்து காணப்பட்ட வெற்றிடத்திற்கே இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹசான் திலகரட்ண தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## மீண்டும் வருகிறார் டெனிஸ் ரபேல் நடால்



ஸ்பெயின் முன்னணி டெனிஸ் வீரர் 26 வயதான ரபெல் நடால், கடந்த ஜூன் மாதம் விம்பிள்டன் டெனிஸ் போட்டிகளுக்கு பின் எந்த போட்டிகளிலும் பங்கேற்கவில்லை. இடது கால் முட்டி காயத்தால் பாதிக்கப்பட்டு நீண்ட நாட்களாக சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் எதிர்வரும் 4ஆம் திகதி சிலியில் தொடங்கும் சர்வதேச டெனிஸ் போட்டியில் களம் இறங்குகிறார். அதைத் தொடர்ந்து பிரேசில் டெனிஸ் (பெப்.11), மெக்சிகோ டெனிஸ(பெப்.25) ஆகிய போட்டிகளிலும் பங்கேற்க இருக்கிறார்.

## ஆஸி.லெவன் அணியுடனான ஆட்டத்தில் மே.இ.தீவு தோல்வி

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய பிரதமர் லெவன் அணியுடன் மோதியது. இந்த ஆட்டத்தில் மே.இ. தீவுகள் 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.


கான்பெரா, மனுகா ஓவல் மைதானத்தில் நடந்த இப்போட்டியில் நாணயசுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய பிரதமர் லெவன் 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 333 ஓட்டங்கள் குவித்தது.

அடுத்து களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் 49 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 310 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

# ஆஸி.கிரிக்கெட் சபையை கடுமையாகச் சாடுகிறார் வோர்ண்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான ஷேன் வோர்ன் அந்த நாட்டு கிரிக்கெட் சபை நிர்வாகிகளையும், அதன் செயற்பாட்டையும் கடுமையாகச் சாடி இருக்கிறார்.

இது குறித்து அவர் தெரிவித்து இருக்கும் விமர்சனத்தில், அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் மிக்கே ஆர்தரை மாற்றி விட்டு நியூசிலாந்து முன்னாள் தலைவர் ஸ்டீபன் பிளமிங்கை பயிற்சியாளராக நியமிக்கவேண்டும். ஸ்டீபன் பிளமிங் பயிற்சியாளர் ஆக்கப்பட்டால் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கு நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. எனது அனுபவத்தில் ஸ்டீபன் பிளமிங் சிறந்த முன்னாள் நியூசிலாந்து அணித் தலைவர். அமைதியானவரும், கிரிக்கெட் அறிவு மிக்கவருமான ஸ்டீபன் பிளமிங் அணியை நன்றாக வழிநடத்துவார். தற்போதைய தேர்வு குழு முழு வேகத்தில் செயற்படவில்லை. தேர்வு குழு தலைவராக முன்னாள் விக்கெட் காப்பாளர் ரோட் மார்சை நியமிக்க வேண்டும். அடுத்த 12 மாதங்கள் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கு மிகவும் முக்கியமான காலமாகும். அதற்காக புதிய திட்டங்களுடன் வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானதாகும். இல்லையெனில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைக்கு நமது கிரிக்கெட் போய் விடும். சுழற்சி முறையில் வீரர்களை மாற்றும் திட்டம் சரியானது அல்ல என்று தெரிவித்துள்ளார். அண்மையில் இலங்கைக்கு எதிரான 20 ஓவர் போட்டி தொடரில் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியா அணி 0:2 என்ற கணக்கில் தோல்வி கண்டது என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். இந்துக் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நேற்று முன்தினம் மரதன் ஓட்ட நிகழ்வு இடம்பெற்றது.

இதில் முதலாம் இடத்தினை கஜந்தன் ,இரண்டாம் இடத்தினை சுபராஜ்,மூன்றாம் இடத்தினை தனுஷன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இவர்களைப் படத்தில் காணலாம். (படம்:மானிப்பாய் செய்தியாளர்)

# மொஹறானுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

நீதிபதிகள் விலகிச் சென்றதன் மூலம் அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாகத் குற்றஞ் சாட்டி புதிய பிரதம நீதியரசருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்று பிற்போடப்பட்டுள்ளது.

சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு என்பவர் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.

இலங்கை உச்ச நீதிமன்றத்தில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இந்த வழக்கில் தாம் சம்பந்தபட்டிருப்பதால், தாம் அதனை விசாரணை செய்ய முடியாது என்று பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் மற்றும் நீதிபதி சிறிபவன் ஆகியோர் அறிவித்தனர்.

அதன்பின்னர், அந்த மனு இன்று புதிய நீதிபதிகளின் கீழ் விசாரணைக்கு அழைக்கப் பட்டுள்ளதாக வழக்கைத் தாக்கல் செய்த நாகானந்த கொடித்துவக்கு கூறியுள்ளார்.

சுங்க வரி ஏய்ப்புத் தொடர்பாக ஒரு தனியார் நிறுவனத்துக்கு எதிரான வழக்கை, தற்போதைய தலைமை நீதிபதியான மொஹான் பீரிஸ், தான் சட்டமா அதிபராக இருந்தபோது தவறான முறையில் வாபஸ் பெற்றதாகவும் இந்த மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதன்மூலம் தற்போதைய பிரதம நீதியரசர் இலங்கை அரசியலமைப்பை மீறியுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளதாக நாகானந்த கொடித்துவக்கு குறிப்பிட்டுள்ளார். (செ–11)

# வடக்கில் ஜனநாயகத்...

உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த மக்களை மீள்குடியேற்றுகிறோம் என்று கூறி இந்த அரசாங்கம் அம்மக்களை அநாதரவான நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது. தமது சொந்தக் காணிகளை இழந்த நிலையில் இம் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, இம் மக்களுக்கு மத்தியில் தற்போது இன, மத வேறுபாடுகள் கிளறப்பட்டுள்ளன. இவ்வாறு பிரச்சினைகளைக் கிளறி அதன் மூலம் சில தரப்பினர் நன்மையடையப் பார்க்கின்றனர். இவ்வாறான பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளிலும் இந்த அரசாங்கம் இதுவரையில் ஈடுபடவில்லை.

அதுமாத்திரமன்றி, இன்று வடக்கிலுள்ள மக்களின் கலாசார உரிமைகளும் பறிக்கப்பட்டுள்ளன. சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை அணி திரட்டி ஒற்றுமையை நிலை நாட்ட முடியும் என்பதை நாம் இந்த அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்றார். (செ–11)

# இலங்கையின் ஜனநாயக...

கலந்து கொள்வாரா? என வினாவப்பட்டபோது, அது குறித்தும் எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலஸ்ரயர் பேர்ட் தெரிவித்தார்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டில், பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என நான் எதிர்பார்க்கிறேன்.

மேலும், பொதுநலவாய நாடுகளின் தன்மை இலங்கையில் தக்க வைக்கப்பட்டுள்ளதா? பொதுநலவாய நாடுகளின் ஜனநாயக மேம்பாடு கடைப்பிடிக்கப் படுகின்றதா? சட்டத் திட்டங்கள் சரியான முறையில் மேற்கொள்ளப்படுகின்றதா? மனிதவுரிமை போன்றவை இலங்கை அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப் படுகின்றதா? என்பதை ஆராயும் நோக்கில் எமது விஜயம் அமைந்துள்ளதாக கருதுகிறேன்.

பொதுநலவாய தலைவர்கள் பங்கு கொள்ளும் இந்த மாநாட்டில் பிரித்தானியா பங்குகொள்வதா என்பது குறித்து எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை விஜயத்தின் பிரதான நோக்கம் குறித்தும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலஸ்ரயர் பேர்ட்டிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்து கருத்துத் தெரிவித்த பேர்ட்,

எனது இலங்கை விஜயத்தின் முக்கிய மானவற்றில் ஒன்று அரசாங்கத்துடனும் சிவில் சமூகத்துடனும் அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் உறுதியான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளேன்.

அத்துடன் யுத்தத்திற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட மேம்பாடுகள், நல்லிணக்க நடவடிக்கைகளுடன் ஒத்துப்போகின்றதா என்பது குறித்து ஆராய்வதாகும்.

எனது இலங்கை விஜயம் ; இரண்டொரு நாட்களே என்பதனாலும் இலங்கையின் வடக்கு–கிழக்கு–மேற்கு– தெற்கு ஆகிய சகல பிரதேசங்களும் விஜயம் செய்ய வேண்டியதனால் இலங்கை பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து அதிக நேரத்தை மேலதிகமாக செலவிடுகின்றேன்.

இதன் மூலம் இலங்கை குறித்த முழு விபரங்களை பெறக் கூடியதாக இருக்கும் என நான் நம்புகிறேன் என தெரிவித்தார். (செ –11)

# விரைவில் திரை...

நாட்களில்முடி பெடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவிடம் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

விஸ்வரூபம் படத்திற்கு இலங்கையில் தடைவிதிக்கவில்லை. தற்காலிகமாக அந்தத் திரைப்படம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த திரைப்படம் தொடர்பில் ஆலோசனை பெற்றுக் கொண்டிருக்கின்றோம்.

முஸ்லிம் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இந்தத் திரைப்படத்தைப் பார்த்து தங்களுடைய விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். தமிழகத்தில் என்ன நடக்கிறது. தமிழக முதல்வர் ஜெயலலிதா எவ்வாறான முடிபுகளை எடுக்கின்றார் என்று நாம் காத்துக் கொண்டிருக்கவில்லை. உலகத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதனை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்.

நான் தாராளவாத கொள்கையை கொண்டவன் என்பதனால் இந்த திரைப்படத்தை திரையிட்டு மக்களின் விமர்சனத்திற்கு விட்டிருக்க வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும் என்றார். (செ –11)






# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

திருநாவலூர் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டிகள் நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் காலை 8 மணிக்கு முன்னர் போட்டி அட்டவணை தயாரிப்பதற்கு சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.


இப்போட்டி சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவைப்படின் 077 9310003 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் திருநாவலூர் விளையாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (3,24)

# கிரிக்கெட் போட்டி

(மானிப்பாய்)

19 வயதுக்கு உட்பட்ட ஸ்ரான்லி கல்லூரி அணியினருக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினருக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது. (3,24)

இடது முழங்கால் காயத்தில் இருந்த மீண்ட ஸ்பெயின் வீரர் நடால், ஏழு மாத இடைவெளிக்குப்பின், சிலி டென்னிஸ் தொடரில் சாதிக்க, பயிற்சியில் ஈடுபட்டார்.




ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

Come, let's speak fluent English

யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட

Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| Sat, Sun 7.00 a.m. | Tue,Thu 8.30 a.m. | Mon, Wed, Fri | Sat, Sun 10.00 a.m. |
| Wed, Fri 3.30 p.m. | Sat, Sun 2.00 p.m | 10.00 a.m. | Tue,Thu 8.30 a.m. |

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

UK செல்வதற்கான A1-Exam (திருமணம் செய்து UK செல்வதற்கான) B1-Exam (Student Visa மூலம் UK செல்வதற்கான)

City & Guilds Approved Centre IELTS • Unique Test Tips • Latest course Materials

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| No.113. கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) | கண்டி வீதி, (HNB அருகில்) | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Jet மோட்டோஸ் சந்தி |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |

DCM யாழ்.நகர் DayClass ஆரம்பம்

கலைப் பிரிவு 03.02.2013 ஞாயிறு 8.00 மணி

வர்த்தகப் பிரிவு 05.02.2013 காலை 7மணி

(திங்கள் - வெள்ளி 7 - 1 வரை)

I, Priyengah Sivarajah followed lectures at MCS leading to successful completion of Bachelor of Information Technology (BIT) conducted by University of Colombo School of Computing. It is the guidance of the panel of Lecturers that enabled me to obtain this prestigious Degree of BIT. I take this opportunity to thank the Director and Lecturers for their unstinted help and guidance that led to my success.

After A/L??

BIT-Degree
University of Colombo
தகமை~ A/L மூன்று பாட சித்தி அல்லது கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் FIT

CIMA-UK
successful pass history!
Approved Training centre
Qualified Lecture Panel

Our Lecturers are really excellent to deal with the subjects in clear & simple. We really enjoyed during my class time because of our lecturers they were very keen with us. They have focused on every individual students. We thank MCS & Lecturers to covered full syllabus on time.
CIMA OPERATIONAL LEVEL STUDENTS

324, Palay Road, Jaffna. For details 772 395 895 MCS IT CAMPUS SMS <name>_<course> to 772 395 895


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Architectural CAD Centre
Sun Britsh Business Management College(Pvt)
No.26,Station Road,Vairavapulliyankulam,Vavuniya

**Personal-Group Classes**

Jaffna Vavuniya

**Auto CAD**

**2D-Drawing & 3D-Modeling**

Lecturer By : Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD Software(2D & 3D)
Faculty of Engineering. University of Peratheniya(S-L)
Cert. in 2D-Drawing & 3D-Modeling in Auto CAD.
Open University of Sri Lanka
Cert. in Auto CAD-2010 (1st Class).University of Colombo
Cert.in Auto CAD (1st Class-B.Top)
Information Technology Park Ministry of Rehabilitation
Dip.in Engineering Drawing & Auto CAD(1st Class)
IIS-International University - Dublin.
Contact No;0718617972 --- 0242226649



A/L தமிழ்

**Day Class**

ஆரம்பம் - 03.02.2013
8.00 மணி

திரு.K.சந்திரலிங்கம்

**DCM** யாழ்.நகர்


## சுகாதார...

கள் ஆதரவாகபெற்று பிரேரணையை நிறைவேற்றிக் கொண்டது.

யாழ்.மாநகரசபையின் இந்த வருடத்திற்கான முதலாவது மாதாந்தப் பொதுக் கூட்டம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக்கூட்டத்தில் முதல்வர் புதிதாக சபையில் வைக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

இதில் யாழ்.மாநகர சபையின் செயலாளர் செ.பிரணவநாதனால் அவசரமான வேண்டுகோளாக மேற்குறிப்பிடப்பட்ட சுகாதாரத் தொழிலாளர்கள் 50 பேரினை மேலதிகமாக இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டதோடு சபை இதற்கு அனுமதியளித்தல் அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

இதன்போது இதுவரை காலமும் சபையின் அனுமதி பெறப்படாமல் பலர் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த 50 பேருக்கு மட்டும் ஏன் புதிதாக அனுமதி கோருகின்றீர்கள் என்பது புரியவில்லை என எதிர்க்கட்சி சார்பாக சு.விந்தன் கேள்வி எழுப்பினார்.

இதன்போது சுகாதாரக் குழுத் தலைவரும் ஆளும் கட்சி உறுப்பினருமான எஸ்.விஜயகாந்த் முதல்வரின் அனுமதியுடன், இந்த சுகாதாரத் தொழிலாளர்களை இணைப்பது தொடர்பில் விளக்கவுரையொன்றினை ஆற்றியிருந்தார்.

இருப்பினும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் (றெமிடியஸ் தவிர்ந்து) எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் சபையில் கடும் வாக்கு வாதம் இடம்பெற்றது.

பின்பு பிரதி முதல்வர் எம்.ரமீஸ் சுகாதாரத் தொழிலாளர்கள் 50 பேரை மேலதிகமாக இணைப்பது தொடர்பில் பிரேரணையொன்றுகொண்டுவந்தார்.

அந்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஆதரவாக 14 வாக்குகள் கிடைத்தன. எதிராக 8 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. இதனால் பிரேரணை நிறைவேறியது.

இருப்பினும் உறுப்பினர்களுக்கிடையிலான வாக்குவாதம் முடிபிற்கு கொண்டுவரப்பட்டதாக இல்லை. பின்பு ஒரு வழியாக முதல்வர் தலையிட்டு வாக்குவாதத்தை முடிபுக்கு கொண்டு வந்தார். (செ-6)


அகவையில் ஆறிருக்க ஆசிரிய
சேவையில் ஆறுதல் காண்
ஆசானை வாழ்த்துகின்றாள் மங்கையர்க்கரசி

திருமதி புஸ்பராணி
சுதந்திரராசா
பகுதித்தலைவர் -
ஆரம்பப்பிரிவு



மென்மையாய் உதிரும் வார்த்தை
மேதினி போற்றும் பண்பு, கண்ணிலும் கருணை
செய்யும் கடமையிற் குறையாச் செம்மை
நல்லதோர் அன்னையுள்ளம் நன்மையே
- சொல்லும் பண்பு
கொண்டவர் மகிழ்வாய் நெஞ்சம்
நிறைந்தென்றும் நீடு வாழ்க!

மங்கையர்க்கரசி குடும்பம்

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.

(J-2308)



## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
## GAQ B.A - 1 B.A-11

**விரிவுரையாளர்கள்**

மெய்யியல் : கலாநிதி வே.யுகபாலசிங்கம்
B.A (Hons), M.A(phi).P.G.D.Ed., Ph.D. (w.P)
தமிழ் : மாவை வி.எம்.லிங்கம் B.A (Hons), M.A. Dip in. Ed.
இந்து நாகரிகம்: திரு.பொன் சந்திரன் B.A (Hons). M.A, Dip in. Ed.
அரசியல் : திரு.எம்.அசோக் B.A (Hons), P.G.D.Ed, M.Ed.
பொருளியல் : திரு.ஜே.தயாபரன் B.A (Hons), Dip in. Ed.
வரலாறு : பிரபல விரிவுரையாளர்
புவியியல் : திரு.பி.எஸ்.வி. தினேஸ் B.A (Hons), M.phil (Re)
வர்த்தகம் : திரு.ச.சுயன் B.Com (Hons), M.M.F
நாடகமும் அரங்கியலும் : பிரபல விரிவுரையாளர்
ஆங்கிலம் : திரு.விஜயபாஸ்கர் B.Com (Hons), M.Ed.

(1625)

விரிவுரைகள் 2013.01.14 ஆம் திகதியிலிருந்து
நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
பதிவுகளுக்கான ஆலோசனை. உதவிகள் எம்மால் வழங்கப்படும்.

**ஸ்ரார் கல்வி நிலையம்,** சுன்னாகம்.



பல்கலைக்கு தெரிவான மாணவர்களுக்கு

A/L இல் வெற்றி ...
பல்கலையிலும்
வென்றிட...

இலவசம் ஆங்கிலப்
பாடநெறியில் கலந்துகொள்ளும்
சகலருக்கும்

**SPOKEN SINHALA**

சவால்களை வெற்றி
கொள்ளும் பட்டத்தைப்
பெற்றிட இன்றே உங்களை
தயார் படுத்துங்கள் ...

Workroom Based
Practical English

**SPOKEN ENGLISH**

ஆங்கிலத்தை தாய் மொழியாகக்
கொண்டவர்களுக்கு நிகரான
Colombo ஆசிரியர் குழாமின்
சிறந்த வழிகாட்டலில் மருத்துவம்,
பொறியியல், கலை மற்றும்
வர்த்தக மாணவர்களுக்கு
தனித்தனி பிரிவுகள்.

Basic English, Advanced English, English Teacher Training, Diploma in English, IELTS

**IISEEES NALLUR CAMPUS**
762 Point Pedro Road, Nallur.0212224728/ 0777 444 225



aat SRI LANKA

கணக்கியல் துறையில் சிறந்த
வேலைவாய்ப்பைப் பெறவிரும்புகிறீர்களா..?

Spectra Skills , இல் AAT கற்கை நெறியை பூர்த்திசெய்யும் அனைத்து
மாணவர்களுக்கும் தொழில் பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கின்றோம்.
பதிவுகளுக்கான தகைமை: O/L 6 பாடங்களில் சித்தி

குறிப்பு: A/L வர்த்தகப் பிரிவில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்களுக்கு AAT யின் ஆரம்ப நிலை (Foundation Level) விலக்களிப்பு (Exemption) இடைநிலையிலிருந்து (Intermediate Level) கற்கைநெறியைத் தொடரலாம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 02.02.2013 சனிக்கிழமை காலை 11.30 மணி

தொடர்புகளுக்கு:
spectra skills 19, Stanly Road, (People's Bank 2nd Floor) Jaffna
Tel : 021 222 1422, 021 222 1423
(சி-2285)



## தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கம்
காரைநகர்



# வாழ்க வளமுடன்

Best Wishes

(1616)

கடந்த பத்து ஆண்டுகளாக யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவராகவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும் கடந்த மூன்று ஆண்டுகளாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவராகவும் சேவையாற்றி தற்போது இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள

**திரு.பொன்னுத்துரை கெங்காதரன்**

அவர்கள் மென்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று
வளமுடன் வாழ எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

உரிமையாளர்கள், பணியாளர்கள், சாரதி நடத்துநர்கள்,
சிற்றூர்திச்சேவை சங்கம், காரைநகர்.

(1627)



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
2013 புதுவருடத்தை முன்னிட்டு
BCHS
விசேட கட்டணக் கழிவில் சர்வதேசத் தரங் கொண்ட கற்கை நெறிகள்

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

Duration : 2 Months

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

புதிய வகுப்புக்கள்
Batch I : 03.02.2013
Batch II : 04.02.2013
Batch III : 09.02.2013
Batch IV : 11.02.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org